# தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்

## (ந.மு. வேங்கடசாமி நாட்டார்)



. நடராஜன்

# தாமேபயின்ற தமிழ்ப்பேராசிரியர்

## (ந. மு. வேங்கடசாமி நாட்டார்)



ஆசிரியர் :

வே. நடராஜன்



வே. நடராஜன்

" நாட்டார் பதிப்பகம் "

4, புதுப்பேட்டை தோட்டத்தெரு, இராயப்பேட்டை,

சென்னை-14

 1956 [விலை ரூபாய் ஒன்று

முதற்பதிப்பு—அக்டோபர் 1956



சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

# முகவுரை

உலகத்தில் பிறந்து வாழ்ந்த பெருமக்களில் உழைப்பினால் உயர்ந்தோர் சிலர். அவர்களில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இவ்விருபதாம் நூற்றாண்டின் புலவர் பெருமானாகத் திகழ்ந்த நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் ஒருவர். அவர் சுமார் 20 வயது வரையில் வேளாண்மையில் ஈடுபட்டுப் பின்னர் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் ஆகிய தேர்வுகளுக்குப் படித்த முறையைக் கேட்கும்பொழுது மயிர் சிலிர்க்கும். இவ்விதம் உழைப்பினால் உயர்ந்து பெரும்புகழ் படைத்த நாட்டார் அவர்களின் வாழ்க்கை வரலாறு மாணவர்க்கு தமிழ்ப் பற்றையும், தாய்மொழித் தொண்டில் ஆர்வத்தையும் உண்டாக்கும் என்னும் நம்பிக்கையால் எழுந்தது இந்நூல்.

நாட்டார் அவர்கள் எழுதிவைத்திருந்த நாட் குறிப்புகளிலிருந்தும், உலக ஊழியர் அவர்களால் நாட்டார் அவர்களின் துணைகொண்டு எழுதப்பட்டதும், நாட்டார் அவர்களின் 60–வது ஆண்டு நிறைவு விழாவில் வெளியிட நினைத்ததுமான வாழ்க்கை வரலாற்றிலிருந்தும் இந்நூல் ஆக்கப்பட்டதாகும்.

இந்நூல் எழுதிய பின்பு முழுவதும் படித்துப் பார்த்து வேண்டிய திருத்தங்கள் செய்து கொடுத்த

எனது சிறிய தந்தையார் ந. மு. கோவிந்தராச நாட்டாருக்கு என் நன்றி உரியதாகும்.

குறித்தகால எல்லையில் திருந்திய முறையில் அச்சிட்டு உதவிய சாது அச்சகத்தார்க்கும் என் நன்றி உரியதாகும்.

சென்னை-14
16—10—1956

வே. நடராஜன்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இளமைப் பருவம் | ... | 1 |
| 2. | புலமையும் பண்டிதர் பட்டமும் | ... | 26 |
| 3. | ஆசிரியர் பணி | ... | 36 |
| 4. | தமிழ்த்தொண்டும் புகழும் | ... | 49 |
| 5. | மணிவிழா ஏற்பாடும், இறைவனடி சேர்ந்தமையும் | ... | 71 |

தாமே பயின்ற தமிழ்ப்பேராசிரியர்,
தமிழ்நூற் கடலை நிலைகண் டுணர்ந்தோர்,
உரைநடைக்கோர் வரை நிறுவிய – நக்கீரர்,
கபிலர், போன்ற நூற்களின் ஆசிரியர், சிலப்பதிகாரம்,
மணிமேகலை, அகநானூறு, திருவிளையாடற் புராணம்
ஆகிய பெரு நூல்களுக்கு உரை கண்ட பேரறிஞர்,
இணையிலா நாநயமும் நாவன்மையும் கொண்டு
செந்தமிழ்ச் சொற்பொழிவாற்றிய
சீர்த்தியாளர், சிவனடி மறவாத சிந்தையர்,
ஆகிய நாவலர், பண்டித
ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.



# தாமேபயின்ற தமிழ்ப்பேராசிரியர்

## 1. இளமைப் பருவம்

### தமிழ்நாட்டின் சிறப்பு

**வ**டக்கில் வேங்கடமலையும், தெற்கில் குமரியாறும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும் எல்லையாக வுடைய நிலம் நெடுங்காலம் தமிழகம் என வழங்கப் படுவதாயிற்று. தமிழகமானது தொன்றுதொட்டு முடியுடை வேந்தர்களான சேர, பாண்டிய, சோழர்களால் ஆட்சி புரியப்பெற்று வந்தது. அதனாலே தமிழகம், சேரமண்டலம், பாண்டி மண்டலம், சோழ மண்டலம் என மூன்று பிரிவுகளையுடையதாயிற்று. இவை மண்டலம் என்னும் பெயரா லன்றி நாடு என்னும் பெயராலும் வழங்கும். சேர நாடு என்பது கொச்சி, திருவாங்கூர் மாகாணமும் மலையாளம் ஜில்லாவும் சேர்ந்த மேல் கரைப் பிரதேச மாகும். பாண்டிநாடு என்பது இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைக்கொண்ட கீழ்க்கரை நாடாகும். சோழநாடு என்பது திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களைக் கொண்டது. இம் மூன்று நாடுகளன்றி, பின்னர் தொண்டை மண்டலம்,

கொங்கு மண்டலம் என்னும் பிரிவுகளும் உண்டாயின. இம்மண்டலங்களின் எல்லை* அளவுகளைப் பின்வரும் தனிப்பாடல்கள் உணர்த்தும்.

### சேரமண்டலம்

'வடக்குத் திசைபழனி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமே தெற்காகு முள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு'

### பாண்டி மண்டலம்

'வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டி நாட்டெல்லைப் பதி'

### சோழ மண்டலம்

'கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்'

### தொண்டை மண்டலம்

'மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பிணகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு'

---

*இவ்வெல்லைகள் எல்லாம் முற்காலத்தில் இருந்த முறையை எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும் என்னும் எண்ணத்தால் சுட்டப்பட்டனவேயன்றி, இப்பொழுது இருக்கும் அரசியல் சூழ்நிலையில் பிரிவு மனப்பான்மை உண்டாக்குவதற்காக அல்ல—ஆசிரியர்.

## கொங்கு மண்டலம்

‘ வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று—கிழக்குக்
கழித்தண் டலைசூழுங் காவிரிநன் னடா
குழித்தண் டலையளவு கொங்கு ’

இவற்றுள் சேரநாடு மலைநாடு; பாண்டிநாடு நானில வளமும் பொருந்தியது. சோழநாடு மருதநில வளமே நிறையப்பெற்றது.

## சோழநாடு

‘ ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு ’

என்பது சோழநாட்டின் வளங் குறித்துப் பண்டைச் சான்றோரொருவர் கூறியது. “ சோழவள்நாடு சோறுடைத்து ” என்பது நம் அன்னை ஔவையாரின் வாழ்த்துரையாகும். சோழநாட்டை நீர் நாடு எனவும், வளநாடு எனவும் கூறுதற்கும், சோழர்களை வளவர் எனக் கூறுதற்கும் காரணமாகவுள்ளது காவிரியாறுகும்.

## காவிரியாறு

சங்கச் செய்யுட்கள் முதலாக எல்லா இலக்கியங்களிலும் காவிரியின் பெருமை பலபடியாகக் கூறப்பெற்றுளது. பொன்னி எனவும் இதற்கொரு பெயருளது. “ பொய்யாதளிக்கும் பொன்னி ” என்று புலவர்களால் பாராட்டப்பெற்றது. இதனைக் கங்கையாற்றுக்கும் உவமையாக வைத்துத் “ தெய்வப்

பொன்னியே பொருவுங் கங்கை" என்றார் கம்ப நாடர். இவ்வாறு புலவர்களால் பாராட்டப்பெற்ற காவிரியாறு பல கிளைகளாகப் பிரிந்து அந்நாட்டை வளப்படுத்துகிறது. இது குடகு நாட்டில் மேற்கு மலைத் தொடரில் தோற்றமாகிறது. மைசூர் நாட்டின் வழியே தமிழ்நாட்டை அடைந்து வங்கக் கடலில் கலக்கிறது. இதன் நீளம் 475 மைல். இதன் பயனை அடைகின்ற நிலம் ஏறக்குறைய 40 ஆயிரம் சதுரமைல் பரப்புடையது. இதன் பெரிய கிளையாறு கொள்ளிடம் என்பது. அது திருவரங்கத்திற்கு மேற்கே காவிரியிலிருந்து பிரிந்து தஞ்சாவூர் ஜில்லாவிற் பாய்ந்து சிதம்பரத்திற்குக் கிழக்கேயுள்ள நடராஜபுரம் என்னும் ஊரின் அருகில் கடலோடு கலக்கிறது. காவிரி பழைய காவிரிப்பூம்பட்டினத்தருகில் கடலுடன் கலக்கிறது. வெண்ணாறு, குடமுருட்டி, அரசலாறு, வீரசோழன் என்பன காவிரியின் ஏனைய கிளையாறுகள் ஆகும். இவை அனைத்தும், இவற்றின் கிளைகள் பலவும், தஞ்சாவூர் ஜில்லாவிற் பாய்ந்து அதனை மிக்க செழுமையுடையதாகச் செய்து வருகின்றன.

ஆறுகளே அன்றி ஆங்காங்கு குளங்களும் குட்டைகளும், தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் மக்களுக்கும் நீரை உதவுகின்றன.

## நாட்டு வளம்

இங்ஙனம் பல ஆறுகள் கொண்டுவரும் வண்டல் மண்ணால் நாடு பண்பட்டு நல்ல விளைச்சலை நல்குகின்றது. நாடெங்கும் பச்சைப் பசேர் எனப் பசுங் கம்பளம் விரித்தது போன்ற குளிர்ந்த வனப்பு மிகுந்த காட்சியை அளிக்கும் வயல்களை ஒருபுறம் காணலாம்.

வானளாவிய மாந்தோப்புக்களையும், தென்னஞ் சோலைகளையும் ஒரு பக்கம் பார்க்கலாம். ஆற்றின் படுகைப் புறங்களிலே வாழைத் தோட்டங்கள் முதிர்ந்த குலைகளுடன் நெருங்கி வளர்ந்திருப்பதைப் பார்க்கலாம். சுருங்கக் கூறின், சோழநாட்டில் சாலைகளைத் தவிர, வேறு பசுமையில்லாத வெற்றிடங்களைப் பார்க்க முடியாது. இவ்வளவு வளப்பமிக்க சோழ நாட்டைப் பற்றிய பின்வரும் பாடல்கள் படித்து இன்புறுதற்குரியன :—

“ ஓங்கு செந்நெலின்
புடையன உயர்கழைக் கரும்பு
பூங்க ரும்பயல்
மிடைவன பூகமப் பூகப்
பாங்கு நீள்குலைத்
தெங்குபைங் கதலிவண் பலவு
தூங்கு தீங்கனிச்
சூதநீள் வேலியசோலை.

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந்தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக்
குவளைகண் விழித்துநோக்கத்
தெண்டிரை யெழினிகாட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம் வீற்றிருக்கு மாதோ.”

### ஊர்கள்

தஞ்சை ஜில்லாவில் ஈராயிரத்திற்கும் அதிகமான ஊர்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆற்றோரம் அமைந்

துள்ள கிராமங்கள் மிக்க அழகுடன் விளங்குவன. ஆற்றில் இருந்து பிரியும் கால்வாய்கள், ஊர்த்தெருக்களின் முன்னும் பின்னும் செல்லும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். ஊர் மக்கள் அக்கால்வாய்களிலேயே தங்களுக்கு வேண்டும் நீரை எடுத்துச் செல்வர் ; நீராடுவர். ஆற்றுநீர் வற்றிய கோடைக் காலத்தில் மக்கள் ஆற்றின் ஊற்று நீரைப் பயன் படுத்துவர். கிராமங்களில் உள்ள கிணறுகளில் நீர் எக்காலத்தும் தரைமட்டத்திலிருந்து 10 அடிக்குக் கீழே செல்லாது. கிராமங்களைச் சுற்றிலும் வானளாவிய தென்னை மா முதலிய மரங்கள் காட்சி அளிக்கும். சாலைகளின் இருமருங்கும் ஓங்கி வளர்ந்த ஆலமரங்கள் அரசமரங்கள் முதலியன குளிர்ந்த நிழலைக் கொடுக்கும். தொலையிலிருந்து பார்ப்பவர்கட்கு இவ்வூர்கள் சோலைகள் போலவே தோன்றும்.

## நடுக்காவேரி

இத்தகைய ஊர்களில் ஒன்று, நமது பெரும்புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் பிறந்த நடுக்காவேரி. இவ்வூர் சோழநாட்டிலே, தஞ்சை மாநகருக்கு வடமேற்கில் இருக்கின்றது. தஞ்சையிலிருந்து திருவையாறு நோக்கி வடக்கே செல்லும் சாலையில் ஆறுவது கல்லில் உள்ள திருக்கண்டியூருக்கு மேற்கே நான்கு கல் தொலையில், காவிரியின் கிளையாகிய குடமுருட்டியின் தென்மருங்கில் நடுக்காவேரி இருக்கின்றது. திருநாவுக்கரசர் தங்கி திருமடம் கட்டி பணி செய்து வந்த திருப்பூந்துருத்தி யென்னும் ஊர் இதன் கீழ்பால் இரு கல் தொலையில் உள்ளது.

இதன் பெயரைக் கேட்ட அளவில் ‘ இது காவிரியின் நடுவில் உள்ளதோ !’ என ஐயமெழுதல் இயல்பு. குடமுருட்டியை வேறு காணுது காவிரியுள் அடக்குதல் பண்டு தொட்ட வழக்கே. நடு என்பதற்கு யாதோர் இயைபும் புலனுகவில்லை. இது திருவையாறு என்பது போல்வதோர் காரணப் பெயராதல் வேண்டும். சிவபிரான் உமையம்மையோடு தீர்த்த நடுவண் ஓர் அடியவர்க்குக் காட்சியளித்தமையால் இப்பெயர் உண்டாயிற்றென சிலர் கூறுவர். இவ்வூருக்கு உத்தண்டவிஜயராகவபுரம் என்பதோர் பெயருண்டெனவும் கூறுவர். இவ்வூரிலுள்ள நெற்கழனிகள் எல்லாம் இருபோகம் விளைவன. இதன்கண் தெங்கும் வாழையும் செறிந்து காணப்படும். சோழநாட்டிலுள்ள வளமிக்க பதிகளில் இதுவும் ஒன்ரும்.

இப்பதியிலே சிவபெருமானுக்கு ஓர் கோயிலும் திருமாலுக்கு ஓர் கோயிலும், மூத்த பிள்ளையாருக்கு இரண்டு கோயில்களும், குமாரக் கடவுளுக்கு ஓர் கோயிலும், ஊர்க்காணித் தெய்வங்கட்கு இரண்டு கோயில்களும் உள்ளன. இவ்வூர்ப் படுகையில் காவிரியின் பாங்கர் கிழக்கிலும் மேற்கிலுமாக இரண்டு குடில்கள் உள்ளன. அவை முறையே கீழைப்பிரமனுர் கோயில், மேலைப்பிரமனுர் கோயில் என வழங்கப்படுகின்றன. அவற்றைக் கண்ணுவர், காசிபர் என்போருடைய ஆச்சிரமங்கள் எனப் பெரியோர் கூறுவர். சென்ற நூற்ருண்டின் இறுதியில், வடமொழியில் பெரும் புலவர்களாய் விளங்கிய, பிரமவித்தியாப் பத்திராசிரியர் கு. ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும், அவர் தம்பி பட்ட ஸ்ரீ நாராயண சாஸ்திரியாரும் இவ்வூரினர்களே.

## நாட்டார் மரபு

அவ்வூரில் உள்ளவர்களில் பெரும்பான்மையினர் "நாட்டார்" என்னும் பட்டப் பெயருடைய கள்ளர் மரபினர். கள்ளர் என்பவர் இத்தமிழ் நாட்டின் பல பகுதிகளைப் பேரரசராகவும் சிற்றரசராகவும் இருந்து ஆண்டவர். சங்க நாளிலே திருவேங்கடத்தை யாண்ட புல்லி என்னும் அரசன் "கள்வர் கோமான்" என்று கூறப்படுகின்றான். அவன் வீரத்திலும் வள்ளன்மையிலும் மிக மேம்பட்டவனென்று தெரிகிறது. பொய்யடிமையில்லாத புலவராகிய சங்கத்துச் சான்றோருள், கபிலர், பரணர், நக்கீரரோடு ஒப்பப் பெருமைவாய்ந்த கல்லாடனாரும் மாமூலனாரும் பல பாட்டுக்களால் அவனைப் பாடியிருப்பதொன்றே அவனது பெருமையை நன்கு புலப்படுத்தும்.

அகநானூற்றில்,

> "கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
> மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
> விழவுடை விழுச்சீர் வேங்கடம்"

என மாமூலனாரும்,

> "புல்லி-வியன்றலை நன்னாட்டு வேங்கடம்"

எனக் கல்லாடனாரும் பாடியிருக்கின்றனர்.

இவ்வாற்றால், சங்க நாளிலே அதாவது ஏறக்குறைய 1800 ஆண்டுகளின் முன்பு "கள்வர்" என்ற பெயர் வழக்கு இருந்ததென்பதும், கள்வர் குலத்தவர் அரசராயிருந்தனர் என்பதும் வெளியாகின்றன. இவ்வரலாற்றின் தலைவர் எழுதியுள்ள "கள்ளர் சரித்திரம்"

என்னும் நூலில் காணப்படும் வடித்தெடுக்கற்பால தாய செய்தி என்னே யெனில், கள்ளர் என்பவர், பல்லவ வகுப்பினர், அல்லது பல்லவரின் ஒரு கிளை என்பதும், தொண்டை நாட்டினின்றும் சோழ பாண்டிய நாடுகளில் குடியேறி அரையர் என்னும் பெயருடன் ஆட்சி புரிந்து வந்தனர் என்பதும், பின்னர் சோழர் குடி முதலியனவும் இம்மரபிலே கலந்து விட்டது என்பதும் ஆம்.

கள்ளர் குலத்தவர், அரசராயும், குறுநில மன்னராயும், அமைச்சராயும், படைத் தலைவராயும் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறார்கள். இங்ஙனமே சிறந்த பக்தர்களும் ஞானிகளும், புலவர்களும், வள்ளல்களும் இக்குலத்தில் தோன்றியிருக்கின்றனர்.

பெரிய புராணத்திற் கூறப்பட்டுள்ள திருத்தொண்டர்களில் கூற்றுவர், நரசிங்கமுனையரையர், ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர், மெய்ப்பொருளார் ஆகிய ஐவரும் இக்குலத்துக் குறுநில மன்னராவர். திருமால் அடியாருள் ஒருவரும் பெரிய திருமொழி முதலிய ஆறு சிறந்த பிரபந்தங்கள் இயற்றி நான்கு கவிப் பெருமாள் என்னும் பட்டம் பெற்றவரும், திருவரங்கத்திற் பல திருப்பணிகள் இயற்றிய பெரியாருமாகிய திருமங்கையாழ்வார் இவ் வகுப்பினர் என்பது வெள்ளிடைமலை. இவர் திருமங்கை என்னும் நாட்டிலே தோன்றிய சிற்றரசராகலின் திருமங்கை மன்னன் எனவும் கூறப்படுவர். முனையதரையன் என்பான் ஒருவன் வீரசோழனுக்குத் தண்டத் தலைவன் என்றும், திருமால் பக்தியிற் சிறந்தவன் என்றும் தெரிகிறது, இக்குலத்து உதித்த கருணாகரத் தொண்டைமான். அரசற்கு அமைச்சனாயிருந்து, திருவாரூரிலே தியா

கேசரது திருவடியிற் கலந்தானென்ற வரலாறு உண்டு.

இந்தியா சுதந்தரம் அடைவதற்கு (1947) முன்பு வரையில், புதுக்கோட்டை அரசராய் இருந்தவர் இம் மரபினரே.

கள்ளர் வீரம் மிக்கவர்; அஞ்சா நெஞ்சினர்; ஆள்வினை உடையவர். சுருங்கக் கூறின் நமது பெரும் புலவர் பிறந்த கள்ளர் மரபு, ஆண்மையும், அரசியல் அறிவும், தெய்வ பக்தியும் வாய்ந்திருந்த பழந்தமிழ் மரபாகும்.

## பெற்றோர்

மேலே சொல்லப்பட்ட புகழ் மிக்க மரபில், நடுக்காவேரியில் நான்கு தலைமுறைகளுக்கு முன்னர் யோகப்புலி நாட்டார் என்பவர் மிக்க செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார். யோகப்புலி நாட்டார் மக்களில் ஒருவர் வீருநாட்டார். இவ்வரலாற்றுத் தலைவரின் பாட்டனாராகிய வீருநாட்டார், சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் கிளைஞருடன் நடுக்காவேரியில் வாழ்ந்து வந்தனர். அவர் போதிய கல்வி அறிவு இல்லாதவராயினும் கற்றவர்களிடத்தில் மிக்க அன்புடையவர். தம் மக்களாகிய முத்துச்சாமி நாட்டார், சோக்கலிங்க நாட்டார் என்னும் இருவருக்கும் கல்வி கற்பிப்பதில் அளவு கடந்த விருப்பமுடையவர்; அவர்கட்குப் போதிக்கும் ஆசிரியர்கட்கு வேண்டிய உதவி செய்பவர்; தெய்வ பக்தியுடையவராய் நாடோறும் ஊரிலுள்ள எல்லாக் கோயில்கட்கும் சென்று வழிபாடு செய்துவரும் நியமமுடையவர். அவருடைய தாயாரும் வீட்டுத் தெய்வத்தை அன்புடன் பரவும் நியமமுடையவர்.




நாட்டார் பிறந்து வளர்ந்த இல்லம்.

அதனால் அத்தெய்வங்கள் அவர்கட்குக் கண்கூடாகப் பேசுவதுபோல் பல சமயங்களில் உண்மைகளை அறிவித்தும் உதவிபுரிந்தும் வந்தனவாம். வீரு நாட்டார் தம்முடைய நிலத்தில் பொதுமக்களின் நன்மைக்காக தோண்டுவித்த குளம், திருவாலம்பொழிலுக்கு அணித்தாகச் சாலையின் அருகில், இன்றும், "வீருநாட்டார் குளம்" என்னும் பெயருடன் விளங்குகின்றது. ஏறக்குறைய 90 ஆண்டுகளின் முன்னர் அவரால் கட்டுவிக்கப் பெற்ற கெட்டி மனையே, நாட்டார் பிறந்த மனையும், நாட்டார் வழியினர் குடியிருக்கும் மனையுமாகும்.

இந்த வீட்டைப் பற்றிய ஒரு செய்தி மட்டில் இங்கே குறிப்பிடத் தகுந்தது. அதாவது, அவ்வீடு இன்றுகாறும் ஒருநாளேனும் பூட்டப்பெற்றில தென்பதே. அதற்கு வேறு சான்றுகள் வேண்டுவதில்லை. அதன் தலைவாயிலிலும் கடைவாயிலிலும் நிலைகளும், கதவுகளும் உள்ளனவேயன்றிப் புறத்தே தாழிடுதற்கும், பூட்டுதற்கும், உரிய கருவிகள் வைக்கப்பட்டில. அதனைக் கட்டிய சாம்பசிவக் கொத்தனார் என்பவர், இம்மனை எக்காலத்தும் பூட்டப்படாது எனக் கூறியே அவற்றை வைக்காது விட்டனராம்.

வீருநாட்டார் ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்தனர். அவருடைய மக்கள் இருவரில் மூத்தவராகிய **முந்துச்சாமி நாட்டார்** இளமையில் நல்ல வனப்பும், உடல்வலியும், உடையவராக இருந்ததோடு ஓரளவு தமிழ் இலக்கியப் பயிற்சியும் உடையவராயிருந்தார். நைடதம், திருவிளையாடற்புராணம், வெங்கைக் கோவை, திருப்புகலூர் அந்தாதி முதலிய சில நூல்களை அவர் அடுத்தடுத்துப் படித்துக் கொண்டிருப்




இல்லத்தின் தலைவாயிற் கதவுகள்.

பர். பெரும்பாலும், கைவல்யம், ஞானவாசிட்டம், முதலிய வேதாந்த நூல்களைப் படிப்பதிலும், சாதகாலங்காரம், குமாரசுவாமியம், உள்ளமுடையான் முதலிய சோதிட நூல்களைப் பார்ப்பதிலும் அவருடைய பொழுது கழியும். காலையில் உணவு ஒன்றும் உண்ணமாட்டார். நீராடி அநுட்டானம் செய்து கொண்டு நண்பகலில் உணவு உண்பார். பகலிலும் இரவிலுமாக இருவேளையே உணவு உண்ணும் வழக்கம் உடையவர். இளையவராகிய சொக்கலிங்க நாட்டார், திருவையாறு மகாவைத்தியநாதய்யர் அவர்களிடம் இசைப் பயிற்சி பெற்று, இசை வழுவாது பாடும் திறமை வாய்ந்தவர். நடுக்காவேரியில் இவரிடம் இசை பயின்றவர் பலர். இவரால் மகாவைத்தியநாதய்யர் குடும்பத்தார் இக்குடும்பத்தாரிடம் மிக்க பழக்கமுடையராயினர்.

## நாட்டார் பிறப்பு

முத்துச்சாமி நாட்டாருடைய மனைவியார் தையலம்மாள் என்னும் பெயரினர்; அமைதியான குணம் உடையவர்; செட்டாகவும், திறமையாகவும் குடித்தனம் செய்யும் இயல்புடையவர். நாள்தோறும் வைகறையில் எழுந்து முகம் கழுவி, திருநீறு இட்டுக் கொண்டு, வீட்டு வாயிலைத் தூய்மை செய்வார். காலை அநுட்டானம் முடித்த பின்பே உணவருந்துவார். மிகக் களையான முகத்தோற்றம் உள்ளவர். அவர்களுக்கு முறையே இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்த பின்னர், ஐந்தாவது குழந்தையாக, இவ்வரலாற்றுத் தலைவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தாரண ஆண்டு,

சித்திரைத் திங்கள் 2-ஆம் நாள் (12—4—1884) விசாக விண் மீன், சிங்க நற்பொழுதில் பிறந்தார். இவருக்குப் பின் ஆண் மக்கள் மூவர் பிறந்தனர்.



" பெற்றோர் "

நாட்டாரின் தமையன் தக்ஷிணாமூர்த்தி என்னும் பெயருடையவர் பதினொன்றாம் வயதில் இறந்தனர்.

அடுத்த தமையன் இராமச்சந்திரன் என்பவர் பதினுரும் வயதில் இறந்தார். ஒரு தமக்கை பிறந்த ஐந்தாம் மாதத்தில் இறந்தனர். நான்காவதாகப் பிறந்த தமக்கையார் இன்றும் உயிருடன் இருக்கின்றனர். தம்பியர் மூவரில் ஒருவர் தமது 36-வது வயதில் இறந்துவிட்டனர். மு. தியாகராஜ நாட்டாரும், மு. கோவிந்தராஜ நாட்டாரும் இப்பொழுது உள்ளனர்.

நாட்டாருக்கு முதலில் இடப்பட்ட பெயர் சிவப்பிரகாசம் என்பது. இளம்பிராயத்தில் இவருக்கு ஒரு கொடிய நோயுண்டாகி வருத்த, பல மக்களை இழந்த பெற்ருேர் மனம் நொந்து, இவருக்கு வேங்கடப் பெருமானை வேண்டி முடி வைத்துப் பெயரையும் வேங்கடசாமி என மாற்றினர். எனவே இவருடைய பெற்ருேர் தீக்கைபெற்ற சைவ சமயத்தினராயினும், திருமாலிடத்தும் பக்தியுடையவர்கள் என்பது புலப்படுகின்றது.

## இளமைப் பருவத்துக் கல்வி

இவர் நடுக்காவேரியில் அவ்வப்பொழுது ஒவ்வொருவரால் நடத்தப்பட்டுவந்த நாலைந்து கிராமப் பள்ளிக்கூடங்களில் படித்திருக்கிருர். அவற்றுள் மூன்று பள்ளிகளில் இவர் பயின்ற காலம் மாதக் கணக்கினவே. இரண்டு பள்ளிகளிற்ருன் சில ஆண்டுகள் கல்வி பயின்றனர். அவற்றுள் ஒன்று வல்லம் குருசாமி உபாத்தியாயர் என்பவரால் நடத்தப் பெற்றது.

குருசாமி உபாத்தியாயரின் உடன் பிறப்பாளர்கள் பலரும் நல்ல கல்வியுடையவர்கள். இவர்களில் எல்லோரிலும் இளையவராகிய கந்தசாமி உபாத்தியா

யர் திருவையாற்று உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்தவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் கல்வி கற்றவர். தமிழ்ச் செய்யுட்களை அவர் கூறுவது கேட்பதற்கு மிகவும் இனிமையாய் இருக்கும்.

குருசாமி உபாத்தியாயர் நடுக்காவேரியில் நடத்தி வந்தது ஓர் திண்ணைப் பள்ளியே. திண்ணைப் பள்ளிகளில் சிறுவர்களுக்கு நெடுங்கணக்கு கற்பிக்கும் போது பரப்பிய மணலில் எழுதச் செய்து பயிற்றுவிப்பதே வழக்கம். இப்பொழுது பெரும் பொருட் செலவில் நடைபெற்று வருகிற ஆரம்பக் கல்வி, செலவு ஒன்றுமில்லாமலேயே திண்ணைப் பள்ளிகளில் நிறைவேறி வந்தது. காலத்திற்கேற்ற சில சீர்திருத்தங்களோடு திண்ணைப் பள்ளிகளை மீட்டும் உயிர்ப்பித்தால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை யுண்டாகும்.

நாட்டார், இத்திண்ணைப் பள்ளியில் அக்கால வழக்கப்படி நெடுங்கணக்கு பயின்ற பின்னர், இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று என்னும் கணக்குச் சார்பான சில சுவடிகளைப் படித்து முடித்தார். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் யாவரும் எழுத்தாணி கொண்டு, ஓலையில் எழுதிப் பழகவேண்டும். உபாத்தியாயர் ஓர் ஏட்டில் யாதேனும் ஒரு செய்யுள் அல்லது சொற்றொடரை, எழுதிக் கொடுத்து அதைப் பார்த்துப் பிள்ளைகளை எழுதும்படி செய்வர். அப்படி ஆசிரியர் எழுதிக் கொடுப்பதற்குச் சட்டம் என்று பெயர். நாட்டாருக்குப் பனையோலையில் திருத்தமாக எழுதமுடியவில்லை. திண்ணைப் பள்ளியில் குழிமாற்றுக் கற்று முடிந்த பின், நாட்டார் தம் தந்தையாரிடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை,

மூதுரை, நல்வழி, நன்னெறி என்னும் நீதி நூல்களைக் கற்றார். பின்பு திருக்குறளில் அறுபது அதிகாரங்கள் வரையில் மனப்பாடம் செய்து தம் ஆசிரியரிடம் ஒப்பித்தார். இவை இவருடைய பிற்காலப் பெருங் கல்விக்கு அடிப்படையாய் இருந்தன.

முன் குறிப்பிடப்பட்ட இரண்டு பள்ளிகளில் மற்றொன்று சாம்பமூர்த்தி ஐயர் என்பவரால் நடத்தப் பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆகும். அதில் 3, 4-ஆம் வகுப்புக்கள் பயின்றார். அந்நாளில் நான்காம் வகுப் பிற்கு அரசியலார் தேர்விருந்தது. இத்தேர்வுக்கு நாட் டார் அவர்களும், நாலைந்து பிராமண மாணவர்களும் ஆசிரியருடன் சேர்ந்து நடுக்காவேரிக்கு மேற்கே எட்டு மைல் தொலையிலுள்ள புதுச் சத்திரம் என்ற இடத்திற்குச் சென்று வந்தனர். இவர் அத்தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் முதன்மை எண் பெற்றுத் தேறினர். நான்காவது வகுப்பில் ஆங்கிலம் கற்பிப் பதும் உண்டு. ஆனல், ஆங்கிலத்திற்குப் பதிலாக 'சுகா தாரம்' என்ற பாடம் எடுத்துக்கொண்டு அத்தேர் வுக்கு எழுதலாமென விதி யிருந்தது. அம்முறைப்படி ஆங்கிலம் பயிலாமலே 'பிரைமரித் தேர்வு'க்கு அவர் எழுதினர்.

இவர் இளமைப்பருவ முதற்கொண்டே திருத்த மாகப் பேசும் வழக்கமுடையவரா யிருந்தார். வழு வின்றித் திருத்தமுறப் படிப்பதும், எழுதுவதும், அவ ருக்கு இயல்பாய் அமைந்தன. அதனல் ஏனைய மாண வர் எழுதுவனவற்றைத் திருத்துதல் முதலிய வேலை களில் இவர் ஆசிரியருக்கு உதவியாய் இருந்து வருவ துண்டு. சிறு பிராயத்திலேயே திருத்தமாகப் பேசு வதைக் கண்டு சிற்சிலர் அவரைக் கேலி பண்ணுவதும்

உண்டு. அவர் படிப்பின் பொருட்டு, ஆசிரியர்களிடம் ஒருபொழுதும் தண்டனை அடைந்ததில்லை.

தொடக்கப் படிப்பு முடிந்த பின், மேல் ஓர் ஆண்டு ஆங்கிலம் படித்துவிட்டு, உயர்நிலைப்பள்ளியில் படிக்கலாமென உபாத்தியாயர், நாட்டாரின் தந்தையாரிடம் கூறினர். ஆனல் நாட்டார், தந்தையாரிடம், "வீட்டிலிருந்தே தமிழ் கற்று வருகின்றேன்" என்று சொன்னர். பள்ளிப் படிப்பு நான்காம் வகுப்புடன் நின்றுவிட்டது.

இவர் பள்ளியில் பயின்றுவந்த காலத்தில் தம் வீட்டுத் திண்ணையில் வழக்கமாகப் படிக்கப்பட்டுவந்த உரைநடையில் எழுதப்பெற்ற பாரத, இராமாயண, கந்தபுராணக் கதைகளை விருப்புடன் கேட்டுக்கொண்டிருப்பார். சில சமயங்களில் தாமே படிப்பவராகவும் இருப்பார். இவர் கதைச்சுவையில் ஈடுபட்டுத் தனியாக அடுத்தடுத்து அவைகளைப் படிப்பதும் உண்டு. பாரதத்தில் பதின்மூன்று, பதினன்கு, பதினேழாம் நாட் போர்களை அவர் எத்தனைமுறை படித்தாலும் அவை அவருக்குத் தெவிட்டாத அமிழ்தமாக இருந்தனவாம். அருச்சுனன் போன்ற வீரர்களின் வரலாறுகள் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. இவையேயன்றி, அபிமன்னன் சுந்தரி மாலை போன்ற எளிய செய்யுள் நடையில் அமைந்துள்ள நூல்களையும் விரும்பிப் பலகாற் பயில்வர்.

## ஒரு சூளுறவு (சபதம்)

நாட்டார் அவர்களின் சிறிய தந்தையாராகிய சொக்கலிங்க நாட்டார் பெரும் புகழ்பெற்று விளங்

கிய சங்கீத வித்துவானுகிய மகா வைத்தியநாதய்ய ரிடம் சங்கீதம் பயின்றவர். சுருதியும் இலயமும் தப்பாமல் திறம்படக் கீர்த்தனங்கள் பாடும் இயல் புடையவர். நடுக்காவேரியில் பலர் அவரிடம் இசைப் பயிற்சி பெற்றுவந்தனர். நாட்டாரும் மற்ருெரு பைய னும் சேர்ந்து அவரிடம் இசை கற்கவிரும்பி அணுகி ஞர்கள். அந்நாளிலே வீட்டுத் திண்ணைகளில் கதை படிப்பதுபோலவே சீட்டாட்டங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும். சிறுவனுய் இருக்கும்பொழுது நாட்டார், சீட்டாடுகின்ற இடங்களுக்குச் சென்று நெடுநேரம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்து விடுவதும் உண்டு. ஆனுல் ஒருநாள், நாட்டாரும், சங் கீதம் கற்க விரும்பிய அந்த மற்ருெரு நண்பனும், “ சங்கித வித்தை கற்க விரும்புகிற நாம் இனி சீட்டு ஆடுகிற இடத்திற்கே போகக்கூடாது ” என்று உறுதிமொழி கூறிக்கொண்டார்கள்.

நாட்டாரின் சிறிய தந்தையார் ஒரு பாட்டைப் பாடிக் காட்டி, அதனைப் பின்பற்றி அவர்களைப் பாடும் படி கூறினுர். நாலைந்து நாள் வரை அதுவேதான் அவர்களின் பயிற்சியாய் இருந்தது. கையால் தாளம் போட்டுக்கொண்டு அதனைப்பாட நாட்டாரால் முடிய வில்லை. அதனுல் சங்கீதப் பயிற்சியை விட்டுவிட்டார். ஆனுல் அதன்பொருட்டுச் செய்துகொண்ட உறுதிமொழியை மட்டும் தன் வாழ்நாள் முடியும்வரையில் உறுதியாகக் கடைப் பிடித்துவந்தார். சீட்டு விளையாடாமை மாத்திரமன்று; சீட்டு விளையாடுகின்ற இடத்திற்கும் அவர் செல்வ தில்லை. இதனுல் அவருடைய வாழ்நாளில் மிகுதியான பொழுதுகள் வீணுகாமல், ஆக்கவேலைகளுக்குப் பயன் படுவன ஆயின.

## புலமைக்கு அடிப்படை

பள்ளிப்படிப்பு முடிந்த பின்பு இவர்தம் தந்தையார்பால் திருப்புகலூர் அந்தாதி, திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி, வெங்கைக் கோவை என்னும் பிரபந்தங்களையும், நைடதத்து முற்பகுதியையும் பாடங் கேட்டனர். நைடதத்தின் பிற்பகுதியையும் திருவிளையாடற் புராணம், வில்லிபாரதம், கம்பராமாயணம் முதலியவைகளுட் சிற்சில பகுதிகளையும் தந்தையார் முன் பொருளுணர்ச்சியோடு படித்தனர். அக்காலத்து இவர்க்கு வயது பதினாறு.

## வேளாண்மையில் ஈடுபடுதல்

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த நாட்டார் தம் குடும்ப நிலைமை சீர்திருந்துவதற்கு வேளாண்மை செய்யக்கருதி அதனிலும் ஈடுபடலாயினர். நாலைந்து ஆண்டுகள் வரையில் நன்செய் புன்செய் நிலங்களில் பயிர் செய்தற்கண் ஊக்கமும் முயற்சியும் உடையராய் உழைத்துவந்தார். அந்நாளிலே நடுக்காவேரிப் படுகையில் புகையிலைப் பயிர் வருவாய்க்கு ஏற்றதாயிருந்தது. இவரும் புகையிலைப் பயிர் செய்யத் தொடங்கினர். அப்பொழுது அவர் பண்ணையாட்களோடும், கூலிக்காரர்களோடும் சேர்ந்து, நெற்கழனிகளில் உழுதல், படுகையில் உழுதல், தண்ணீர் முகந்துவார்த்தல், ஏற்றஞ் சால்கொண்டு நீர் இறைத்தல், புகையிலைக்குக் கொழுந்து கிள்ளுதல் முதலிய கடுமையான வேலைகளில் உழைத்துவந்ததன் பயனாக நல்ல ஊதியமும் கிடைத்துவந்தது.

ஐப்பசி மாதத்தில் கிராம மக்கள் நாள்தோறும் விடிதற்கு முன்பே, ஆற்றிற்குச் சென்று முழுகிவருவது உண்டு. இதற்குத் துலாமுழுக்கு என்று பெயர். நாட்டாரும் இவ்வாறு நாடோறும் முழுகி, உழுதல் முதலிய வேலைகளில் ஈடுபட்டதால், அவருக்குப் பித்த வாத சுரம் ஏற்பட்டது. ஒரு மாதத்திற்கு மேலாகியும் காய்ச்சல் தணியவில்லை. வைத்தியரும் சோர்வுற்றார். அவர் தந்தையாருக்கு அவர் பிழைப்பரோ என்ற ஐயம் ஏற்பட்டது. அதனால் அவர் தமது வீட்டிற்குக் கிழக்கே அரை மைல் தொலையில் உள்ள தம் குலதெய்வத்தின் கோயிலுக்கு நள்ளிரவில் சென்று வணங்கிக் கொண்டிருந்து நல்ல செய்தியைக் கேட்ட பின்புதான் வீட்டிற்குத் திரும்பினர். அந்நாளிலே யுனனி வைத்தியமும், தமிழ் வைத்தியமும் நன்கு பயின்று, நோயின் காரணத்தைக் கூர்மையாக அறிந்து மருத்துவம் செய்யும் முகம்மதியர் ஒருவர் அடுத்த கிராமத்தில் மணியக்காரராய் இருந்தார். அவர்தான் அப்பொழுது நாட்டாருக்கு வைத்தியம் செய்தவர். அவர் காரணமாக நாட்டார் உயிர் காப்பாற்றப்பட்டது எனல்வேண்டும். நோய் தணிந்த பின்பும் அவரது வலக்கை வாயுத் தொந்தரையால் நீட்டவும் முடக்கவும் முடியாமல் இருந்தது. கை செம்மையுறுதற்கு ஓராண்டிற்கு மேலாயிற்று. நாட்டார் தமது இருபதாம் வயதுவரையில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தார். அவ்வாறு ஈடுபட்டிருந்த நாட்களிலும் ஒழிந்தபோதெல்லாம் படித்துவந்தார்.

சூடாமணி நிகண்டில் 11–ஆம் தொகுதி முழுதும் பாடம் பண்ணினர். வடமொழி கற்க விரும்பிக் கிரந்த எழுத்துக்களைப் பயின்று நீதிசாரம் முதலிய

சிலவற்றையும் ஓரளவு சப்தத்தையும் பயின்றார். அமர நிகண்டில் நூற்றுக்கு மேலான சூத்திரங்களைப் பாடம் செய்தார்.

## அறிஞர் கூட்டுறவு

அக்காலத்து இவர் தந்தையார் கல்வி அறிவுடையார் என்பதனைக் கேட்டு அவரைப் பார்க்கவரும் புலவர்களோடு இவரும் அளவளாவுவது உண்டு. மதுரையில், நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றிய பின்பு, தஞ்சைக் கல்யாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் இருந்த சில ஆசிரியர்கள், பாப்பா நாட்டு சமீன்தார், திருவாளர் சாமிநாத விசய தேவருடைய தலைமையில் " தஞ்சைத் தமிழ்ச் சங்கம் " எனப் பெயரிய கழகம் ஒன்றினைத் தோற்றுவித்து நடத்திவந்தனர். அக்கழக உறுப்பினருள் நம் நாட்டார் அவர்களின் தந்தையாரும் ஒருவராதலின் அங்கு நடைபெறும் சிறப்புக் கூட்டங்கட்கு வரும் அழைப்பினைப் பெற்றுத் தந்தையார் செல்லும்போது தாமும் சென்று சொற்பொழிவுகளைக் கேட்பார். இவர் இவ்வாறெல்லாம் இலக்கியப் பயிற்சி பெற்றுவந்தாராயினும் கற்பிப்பார் யாரும் இன்மையின், இலக்கணம் பயில வாய்ப்பு இல்லாதவராய் இருந்தார். ஜி. யூ. போப்பையர் இயற்றிய சிற்றிலக்கணம் மாத்திரம் தொடக்கப் பள்ளியில் இவர் பயின்றிருந்தார். பின்பு நன்னூற் பாயிர வியலிலும் எழுத்தியலிலும் உள்ள சூத்திரங்களைத் தாமாகவே மனப்பாடம் செய்தார். போதிய இலக்கண இலக்கியப் பயிற்சி இல்லாதிருப்பினும், செய்யுட்களின் பொருளைக் கூடியவரையில் சரியாய் அறிந்துகொள்ளக்

கூடிய இயற்கை ஆற்றல் இவரிடம் இருந்தது. நடுக் காவேரிக்குவந்த ஒரு புலவர்,

"கற்றவரே மானுரி காயரா காசினிதேர் "

என்னும் ஒரு வெண்பாவின் முதலடிக்கு உண்மைப் பொருள் உணராது அவ்வெண்பாவைத் தவறு என்று கூறியபோது இவர் அதனை,

*" கல்தவர் ஏமால் நாரிகாய்அரா காசினிதேர் "

எனப் பிரித்துப் பொருள்கூறி உண்மை உணர்த்தினர்.

அந்நாளிலே தொடக்கப் பள்ளிகளின் மேற்பார்வையாளராய் இருந்தவரும், "சாவித்திரி வெண்பா" என்னும் நூலின் ஆசிரியரும் ஆகிய திருவாளர் ஐ. சாமிநாத முதலியார் அவர்கள் மிகுந்த தமிழ்ப் பற்றுடையவராய்த் தமிழ் கற்றவர்களைக் கண்டு அளவளாவியும் பள்ளிக்கூட ஆசிரியர்கள் பலர் திங்கட்கு ஒன்றிரண்டு முறை ஓரிடத்திற் கூடித் தமிழிற் சொற்பொழிவு செய்யும்படியாகத் தூண்டியும் யாவர்க்கும் தமிழ் கற்பதில் ஊக்கம் உண்டாகும்படி செய்துவந்தார். அவர் நடுக்காவேரிக்கு வருங்காலங்களில் நம் நாட்டார் அவர்களோடும் அவர் தந்தையாரோடும் அளவளாவி மகிழ்வர். ஒருநாள் அவர் இளங்காடு என்னும் ஊரிலே செவ்வந்திப் புராணத்தில் உள்ள,

கான வாரிசப் பொகுட்டுறை கடவுளும் கனகத்
தான வாரியும் வலாரியும் காண்கிலாத் தலைவ

---

*கல்=மாமேருமலை, தவர்=வில், ஏ=அம்பு, மால்=திருமால், நாரி=வில்நாண், காய்அரா=சினமுள்ள வாசுகி என்னும் பாம்பு, காசினி=பூமி, தேர்=இரதம்.

**ஞான வாரியில் அமுதமே கருணைவா ரிதியே**
**வானர் நாடநீ யுனைப்பிரிந் தெங்ஙனம் வாழ்கேன்!**

என்னும் செய்யுளில் " கனகத்தானவாரி " என்னும் தொடருக்கு உண்மைப்பொருள் காணாது ஒவ்வொரு வர் ஒவ்வொரு வகையாப் பொருள் கூறியது தம் கருத் துக்கு ஒவ்வாமையால் அதனை நாட்டார் அவர்களிடம் கூற உடனே இவர் அதனைக் " கனகத்தானவ அரி " எனப் பிரித்து " இரணியாசுரனுக்குப் பகைவன் " என்று பொருள் கூறினர். அதனைக்கேட்ட முதலி யார் மிகவும் மகிழ்ச்சியுற்று இவரிடம் மேன்மேலும் பற்றுடையரா யிருந்தார்.

## 2. புலமையும் பண்டிதர் பட்டமும்

மேற்கூறிய, திருவாளர் ஐ. சாமிநாதமுதலியார் அவர்கள், பின்பு ஒரு நாள் நடுக்காவேரிக்கு வந்த பொழுது, நாட்டாரிடம், " மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று நடைபெற்று வருகிறது ; அதில் தமிழ்ப்புலமையின் பொருட்டுப் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீங்கள் அத்தேர்வுகளுக்குப் படிக்கவேண்டும் ", என்று கூறினர். இவர் அதனைக் கேட்ட பொழுது மூன்றாவது தேர்விற்கே படிக்கலாமென எண்ணிக்கொண்டு அதற்குரிய புத்தகங்கள் யாவை எனக் கேட்டார். தேர்வுபற்றிய விதிகளும், தேர்வுக்குரிய நூல்களின் பெயர்களும் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்துள்ளன என்றும், அப்பத்திரிகையை அனுப்புவதாகவும் கூறிச்சென்று, அதனை அனுப்பி வைத்தனர். அதனைப் பார்த்தபொழுது ஒவ்வொரு தேர்வுக்கும் உரிய இலக்கண இலக்கிய நூல், மிகப் பலவாகவும், அவற்றுள் பல இவர் அதுவரை கேட்டறியாதனவாகவும் இருந்தமையின், " பிரவேச பண்டிதர் " என்ற முதல் தேர்விற்கே முதலிற் படிப்பதென உறுதி செய்து கொண்டு படித்து வருவாராயினர்.

### மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவி, தமிழ் வளர்க்கத் தொடங்கியவர், வள்ளல் பாண்டித் துரைத்தேவர் ஆவர். இவர் பாலவநத்தம் ஜமீன்தார் பொன்னுசாமித்

தேவரின் குமாரர் ஆவர். சேது சமஸ்தானப் புலவரான முத்துசாமி ஐயங்கார் என்பவரிடம் தமிழ் நூல்களைக் கற்றவர். தமிழ் வளர்க்கும் ஆர்வம் கொண்டு, 1901-ம் ஆண்டு மே-மாதம் 24-ம் தேதி, மதுரையில் பாஸ்கர சேதுபதி மன்னர் அவர்கள் தலைமையில் "மதுரைத் தமிழ்ச் சங்கம்" என்று பெயரிட்டு சங்கம் நிறுவினர். அச்சங்கத்திற்கு உறுப்பாகப் "பாண்டியன் புத்தக சாலை" என்னும் நூல் நிலையமும், "சேதுபதி செந் தமிழ்க் கலாசாலை" என்னும் தமிழ்க் கல்லூரியும் நிறுவப்பெற்றன. "செந்தமிழ்" என்னும் மாதப் பத்திரிகையும் தொடங்கப்பட்டது. ஆங்கிலக் கலா சாலை மாணக்கர்கட்குத் தமிழ் கற்பதில் விருப்பம் உண் டாகும் பொருட்டுத் தமிழ்த் தேர்வுகளும், ஏனையோர் தமிழில் புலமையடையும் பொருட்டுப் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் ஆகிய தனித் தமிழ்த் தேர்வுகளும் ஏற்படுத்தப்பட்டன. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் இம்மூன்று தேர்வுகளுக் குரிய வகுப்புக்கள் நடத்தப்பெற்று வந்தன. ஒவ் வொரு தேர்விற்கும் இக்கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் படிக்கவேண்டும். இக்கலாசாலையிற் சேர்ந்து படிக்காதவர்களும் தேர்வுகளுக்கு எழுதலாம் என்ற விதி இருந்தது. தனித் தமிழ்த் தேர்வு, 1905-ம் ஆண்டுமுதல் தொடங்கி நடந்து வருவதாயிற்று.

## நாட்டாரும் முதல் தேர்வும்

தேர்வு நடைபெறுவதற்கும், தேர்வைப் பற்றிய செய்திகளை நாட்டார் அறிவதற்கும் இடையே பத்துத் திங்களே இருந்தன. ஆகையால் இவர் உடனே தேர்வுக்குரிய நூல்கள் அனைத்தையும் தொகுத்துக்

கொண்டு இடையரு முயற்சியுடன் படிப்பாராயினர். பிரவேச பண்டிதர் தேர்வுக்குரிய நான்மணிக்கடிகையும், விசாகப்பெருமாள் ஐயர் அணியிலக்கணமும் கிடைக்கப் பெருமையால் அவற்றை இரவலாகப் பெற்று, கையால் எழுதி வைத்துக்கொண்டு படிப்பாராயினர். ஆறுமுக நாவலர் நன்னூற் காண்டிகையின் பதிப்பு முறையானது, நாட்டார் ஆசிரியர் இன்றித் தாமே அந்நூலைப் பயிலுதற்குப் பெருந்துணையாயிருந்தது. நன்னூல் முதலிய இலக்கணங்கள் எல்லாவற்றையும், நாலடியார், நான்மணிக்கடிகை என்னும் நீதி நூல்களையும் இவர் முழுதும் மனப்பாடம் செய்துவிட்டார். நன்னூலை இவர் மனப்பாடம் செய்த முறையே இக்கால மாணவர்களுக்கு வியப்பாக இருக்கும். நன்னூல் சூத்திரங்களை மனப்பாடம் செய்தது மாத்திரம் அன்றி, சூத்திரங்களுக்கு உதாரணமாகவரும் சொற்களைச் சூத்திரங்கள்போல் தாமே செய்யுட்களாகச் செய்து கொண்டு, அவற்றையும் மனப்பாடம் செய்தார். இம்முறையானது, நூலை சிறிதும் ஐயந்திரிபின்றிக் கற்பதற்கு அவருக்குப் பேருதவியாயிருந்தது. மற்றைய இலக்கியங்களிலும் சுவையுடைய பகுதிகளை எல்லாம் பாடம் செய்தனர்.

> **" மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்**
> **எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி**
> **அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
> **கருமமே கண்ணாயி னார் "**

என்பது பெரியோர் அநுபவ வாக்கன்றோ ? இவ் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக, குன்று ஊக்கமும் சலியா உழைப்பும் உடைய நாட்டார், கருமமே கண்ணா

யிருந்து பாடங்கள் அனைத்தையும், ஆசிரியரின்றித் தாமே படித்து முடித்தார். திருச்சிராப்பள்ளி தேர்வு எழுதுவதற்குரிய இடங்களில் ஒன்று. நாட்டார் தம் தந்தையாருடன் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றார். அவருடன் தஞ்சைவட்டத்திலிருந்து வேறு மூவரும் தேர்வுக்குச் சென்றிருந்தனர். திருச்சி எஸ். பி. ஜி. (S. P. G. College) கல்லூரியில் (பின்னர் பிஷப் ஹீபர் கல்லூரி என வழங்கப்பட்டது) பேராசிரியர் குருராவ், தேர்வின் மேற்பார்வையாளராக இருந்தார். நாட்டார் தேர்வுக்குரிய வினாத்தாள்கள் எல்லாவற்றிற்கும் செவ்வையாக விடையெழுதி மீண்டனர். பின்பு தேர்வின் முடிவு 'செந்தமிழில்' வெளியாயிற்று. 'முயற்சி திருவினையாக்கும்' அல்லவா? அவ்வாண்டில் அத்தேர்வுக்குச் சென்றவர் எண்மருள் தேறியவர் நால்வர். அவருள் முதல் வகுப்பில் தேறிய இருவருள் நாட்டார் இரண்டாம் பரிசு பெறுதற்கு உரியராயிருந்தனர். சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிலேயே பயின்ற ஒருவர் முதற்பரிசுக்கு உரியராயினர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா அறிவிப்பு வந்த பொழுது, பரிசில் பெறுவதற்காக, நாட்டார் தம் தந்தையாருடன் மதுரைக்குச் சென்றார். இவர் தேர்வின் பொருட்டுத் தமக்கு உரிய பரிசேயன்றி, இலக்கணத்தில் முதன்மையாய்த் தேறியதற்கெனச் சிறப்புப் பரிசு ஒன்றும் பெற்றார். பரிசாகப் பெற்ற தொகை முழுவதையும் கொண்டு நாட்டாரின் தந்தையார் அடுத்த தேர்வுகட்குரிய புத்தகங்களை அப்பொழுதே வாங்கினர்.

## பால பண்டிதம்

முதல் தேர்வை முடித்த பிறகு இரண்டாண்டுகள் படித்தாலன்றி இரண்டாவது தேர்வாகிய பால பண்டி

தத்திற்கு யாரும் எழுத முடியாதபடி பாடநூல்கள் அவ்வளவு அதிகமாயிருந்தன. அவ்வாறிருந்தும் அந்நூல்களை நாட்டார் ஒரே ஆண்டில் படிக்கத் துணிந்தார். அந்நூல்களை அவருக்குக் கற்பிக்குந் தகுதி



பொற்பதக்கம்

யுடைய யாரும் ஊரில் இல்லை. எனினும் இதைக் குறித்து அவர் சிறிதும் கவலை கொள்ளாது தனது அறிவே துணையாகக்கொண்டு ஊக்கத்தோடு படித்து வந்தார். அடுத்த ஆண்டில் (1906) தந்தையாருடன்

திருச்சி சென்று எஸ். பி. ஜி. கல்லூரியில் தேர்வை எழுதி வந்தார். அப்பொழுது அக்கல்லூரித் தமிழாசிரியராகிய பிச்சை இப்புராகிம் புலவர் மேற்பார்வையாளராக இருந்தார். அந்த வருடம் பால பண்டிதத் தேர்வில் நாட்டார் ஒருவரே தேறினர். இதிலும் முதல் வகுப்பில் தேறியிருந்தமையால் முதற் பரிசிலாகப் பொற்பதக்கம் (gold medal) பெறுவதற்கு உரியவர் ஆனார். இவ்வாண்டிலும், ஆண்டு விழாவின்பொழுது தந்தையாருடன் மதுரைக்குச் சென்று பரிசில் பெற்றுச் சங்கத்துக்கு வந்திருந்த புலவர் பலரோடும் அளவளாவியும் சொற்பொழிவுகளைச் செவிமடுத்தும் மீண்டனர்.

## பண்டிதத் தேர்வு

நாட்டார் முதல் இரண்டு தேர்வுகளையும் ஒவ்வோராண்டிலேயே முடித்தார். எனினும் மிகப் பலவான இலக்கண இலக்கியங்கள் படிக்கவேண்டி இருந்தமையாலும், அவற்றுள் பல மனப்பாடம் செய்யத்தக்கனவாக இருந்தமையாலும், பண்டிதத் தேர்வினை இரண்டு வருடங்கள் படித்து எழுதுதல் வேண்டுமென எண்ணினர். நாட்டார் முன் தேர்வுகளில் சிறப்பாகத் தேறினபடியால் அளவற்ற மகிழ்ச்சியடைந்து அதனைப் பலவிடங்களில் பாராட்டிக் கூறியும், அடுத்தடுத்து நாட்டாருக்கு ஊக்கமூட்டியும் வந்த திரு. ஐ. சாமிநாதமுதலியார் அவர்கள், நாட்டாருடைய எண்ணத்தினையும் அவருடைய பெற்றோர்கள் அவருக்கு மணம் செய்விக்க வேண்டுமென முயல்வதனையும் அறிந்து மூன்றாம் தேர்வும் முடிந்த பின்பே மணம் செய்விக்க வேண்டுமெனப் பெற்றோர்கட்குக்

கூறியதுடன் இந்த ஒரு வருடத்திலேயே பண்டிதத் தேர்வும் எழுதி வெற்றிபெறவேண்டும் என நாட்டாரிடம் வற்புறுத்தி வந்தனர். அதனால் இவர் அத்தேர்வுக்கும் பேரூக்கத்தோடும் பெருமுயற்சியோடும் படிப்பாராயினர்.

அம்மூன்று தேர்வுகட்கும் படிக்கும் காலங்களில் அதற்கென்றே வீட்டுமெத்தைமேல் கட்டப்பட்ட "தமிழவள் இருக்கை" என்னும் பெயருடைய அறையில் இவர் தனியாக இருந்து இடைவிடாது படிப்பர். ஒரு கணப்பொழுதும் வீணிலே செலவழிப்பதில்லை. தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை நன்கு படித்தார்; சூத்திரங்களை மனப்பாடம் செய்தார்; உரையை நன்றாகப் படித்து உள்ளத்தில் அமைத்தார். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய பழந்தமிழ் எட்டுத்தொகை நூல்களைப் பழைய உரையுடன் நன்கு கற்றார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருக்குறள், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களில் உள்ள பாடப்பகுதிகளையும் பயின்றார். அவர் இவ்வளவு பெரிய கடினமான நூல்களையெல்லாம் ஆசிரியர் உதவி இல்லாமலேயே படித்தார்; ஆசிரியர் உதவிகொண்டு இரண்டு வருடங்கள் படிக்கவேண்டிய நூல்களை ஆசிரியர் உதவி இன்றி ஒரே ஆண்டில் படித்தார் எனின், அவரது அறிவுநுட்பத்தையும் அவர் மேற்கொண்ட பேருழைப்பையும் என்னென்பது!

பண்டிதத் தேர்வுக்குரிய நூல்களில் 'தருக்க சங்கிரக தீபிகை' என்பதும் ஒன்று. அதன் உரையின் சிற்சில பகுதிகள் சந்தேகத்தை உண்டுபண்ணினபடியால்,


அப்பொழுது தஞ்சையில் பல மொழிகளில் வல்லுநரும், பல வேதாந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த் தவரும், தருக்கத்தில் வல்லுநரும் ஆக இருந்த திரு. குப்புசாமிராசு என்பவரிடத்தில் சென்று ஐந்தாறு நாட்கள் தங்கி தமது சந்தேகங்களைப் போக்கிக் கொண்டு வந்தார்.

அவ்வாண்டுத் தேர்வுக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு வழக்கம்போல், தாம் சிவபிரான் திருக் கோயிலை அடைந்து தொழுது நின்றபொழுது, ஒரு நல் நிமித்தம் உண்டாக மகிழ்ச்சியுடன் வணங்கி மீண் டனர். அவ்வாண்டிலும் வழக்கம்போலவே தந்தை யாருடன் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று தேர்வுக்கு எழுதிய பொழுது, மேற்பார்வையாளராக இருந்த பிச்சை இப்புராகிம் புலவரவர்கள் இவரது திறமையை அறிந்து, மகிழ்ந்து மிகவும் அன்பு பாராட்டுவாரா யினர். அந்த வருடத்திலும் பண்டிதத் தேர்வில் தாம் ஒருவரே தேறி, முதல் வகுப்பில் முதன்மையாகத் தேறி யவர்க்குரிய தங்கத் தோடா பெறுதற்குரியர் ஆயினர்.

## தங்கத் தோடா

அந்த வருடம் பரிசு பெறுதற்குத் தந்தையாருடன் மதுரைக்குச் சென்றபொழுது, திருச்சியிலிருந்து பிச்சை இப்புராகிம் புலவரும் சென்றமையால் அவரு டன் நெருங்கிப் பழகும்படி நேர்ந்தது. அவ்வாண்டு விழாவில் தலைமைதாங்கியவர் புதுக்கோட்டை மன்ன ருடைய தம்பியாகிய தட்சிணாமூர்த்தி துரை ராஜா, பி. எ., பி. எல். அவர்கள் ஆவர். தலைவர் தோடாப் பரிசினை நாட்டார் கையில் அளிக்கச் செய்மையிலிருந்த பாண்டித்துரைத்தேவர் அவர்கள் விரைந்து வந்து

தாமே அதனை வாங்கித் தம் கைகளால் நாட்டாருடைய கையில் அணிவித்து மகிழ்ந்தனர். அன்றுமுதல், நாட்டார் அவர்கள், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் என்று அழைக்கப்பட்டனர்.



தங்கத் தோடா

நாட்டார் அவர்கள் பண்டிதத் தேர்வினை முடித்துச் சில வருடங்கள் கழிந்த பின்னரே ஏனையோர் அத் தேர்வுக்கு எழுதுவாராயினர். தமிழ்ப் புலமையின் பொருட்டு முதன்முதலாக ஏற்படுத்தப்பட்ட, " முத் தேர்வும், மூவாண்டில், முதன்மையினில், முற்றுவித்த "மை

யால் அவருடைய பெயர் நாடெங்கும் எளிதில் பரவுதற்கும், பலர் அவரிடம் அன்பு கொள்ளுதற்கும் ஏதுவாயிருந்தது. இவ்வாறாக 1907-ஆம் ஆண்டிலே பண்டிதத் தேர்வை வெற்றியுடன் முடித்த பின்னர்த் தேர்வுக்குப் படித்த நூல்களுள், எஞ்சியிருந்த பகுதிகளையும், பிற நூல்களையும் தாமாகப் படித்துக்கொண்டு வருவாராயினர்.

கல்லூரிகளில் ஆசிரியராக இருக்கவேண்டுமென்ற ஆவலோ முயற்சியோ நாட்டாரிடம் இருந்ததில்லை. அந்நாளிலே புதுக்கோட்டை அரசர் கல்லூரித் தலைவராக இருந்த இராதாகிருஷ்ண ஐயர் அவர்கள் தம் கல்லூரிக்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வேண்டுமென்றும், அதன் பொருட்டு நாட்டாரை நேரில் வந்து தம்மைப் பார்க்கும்படியும் கடிதம் எழுதியிருந்தார். நாட்டார் தம் தந்தையாரோடு புதுக்கோட்டைக்குச் சென்று கல்லூரித் தலைவர் விருப்பப்படி ஒரு வகுப்பில் பாடம் நடத்தித் தம் திறமையைக் காட்டினர். எனினும், கல்லூரிக்கு அப்பொழுது உதவிப் பண்டிதரே வேண்டுமென்றும், அதற்குச் சம்பளம் இது வென்றும் அவர் கூறினர். அவர் குறிப்பிட்ட சம்பளம் மிகக் குறைவாக இருந்தமையால் இவர் அதனை ஏற்றுக்கொள்ள மனமில்லாது ஊருக்கு வந்து விட்டார்.

# 3. ஆசிரியர் பணி

## திருமணம்

பின்பு தம்முடைய பழைய உறவினராகிய செங்கிப் பட்டித் திருவாளர் சீனு மேற்கொண்டார் அவர்களின் மகளாராகிய இந்திராணியம்மாள் என்னும் பன்னீராட்டைப் பருவமுடைய நங்கையை, 1907-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் (பிலவங்க, ஆவணி, 24-ல்) அதாவது அவருடைய 23-வது வயதில் பெற்ஞேர் அவருக்குத் திருமணம் செய்வித்தனர். அவருக்கு மனேவியாராக வாய்ந்த அம்மையார் அன்பு, அடக்கம், தெய்வபக்தி, விருந்தினரை இன்முகம் கூறி உபசரித்தல், கணவர் கருத்தறிந்து நடந்து கொள்ளல் முதலிய நற்பண்புகள் வாய்க்கப் பெற்றவர். தந்நலம் கருதா தகைமையாளர். தனக்கென்று இன்று வரையில் ஒரு பெட்டியோ, படுக்கையோ இல்லாது கணவனுக்கும் மக்களுக்கும் பேரர்களுக்கும் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து போன பெண்களின் திலகம்.

## ஆசிரியர் ஆயினமை

1908-ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் திருச்சி, எஸ். பி. ஜி. காலேஜில் தமிழாசிரியராக இருந்த பிச்சை இபுராகிம் புலவர் அவர்கள், தாம் கல்லூரிக்குப் போக முடியாதவாறு நோயுற்றபடியால் தாமே நாட்டாரை நடுக்காவிரியிலிருந்து அழைத்துவரச் செய்து தமக்குப் பதிலாகத் தமிழாசிரியராக இருத்தற்குத் தகுதியுடைய



" ந. மு. வே. நாட்டார்; இந்திராணியம்மாள் "
1939-ல் எடுத்தபடம்.

வர் இவரே எனவும், தாம் நலமுற்று வரும் வரையிலும் இவரையே அவ்வேலையில் அமர்த்த வேண்டும் எனவும் அப்பொழுது கல்லூரித் தலைவராக இருந்த ரெவரெண்டு ஷர்ராக்கு துரைக்குக் கடிதம் எழுதி அவர் உடன்பாடு பெற்று இவரை வேலையில் அமர்த்தினர். இவர் 21—7—1908 முதல் அதனை ஏற்று எப். ஏ., பி. ஏ., வகுப்புகட்கு மாணக்கர்கள் மகிழும்படி திறமையாகப் பாடங் கற்பித்து வருவாராயினர். பின்னர் ஒன்றிரண்டு திங்களில் புலவர் நோய் மிகுதியால் இவ்வுலக வாழ்வினை நீத்தனர். சிறந்த புலமையும், பெருமதிப்பும் உடையராயும் கல்லூரி ஆசிரியர், மாணவர் அனைவராலும் கொண்டாடப்படுபவராயும் இருந்த புலவருடைய பிரிவு குறித்து நாட்டார் கையறுநிலைச் செய்யுட்கள் சில இயற்றி அச்சிட்டு வழங்கினர்.

அந்நாளிலே டிசம்பர் மாதத்திலேயே பல்கலைக் கழகத்துத் தேர்வுகள் நடப்பது வழக்கம். கல்லூரித் தலைவர், டிசம்பர் எழாந் தேதிக்குப் பின் இவர் வேலை கல்லூரிக்குத் தேவையில்லை என்றும், ஆனல் 1909 ஜனவரி 15-ஆம் தேதிக்குப் பின் எஸ். பி. ஜி. உயர் நிலைப்பள்ளியின் பண்டிதர் வேலை காலியாகின்றபடியால் அதற்கு விருப்பமிருந்தால் தமக்கு விண்ணப்பம் செய்யலாம் என்றும் நாட்டாருக்கு அறிக்கை விடுத்தனர். அவ்வாண்டுத் தேர்வுக்குப் படித்த மாணக்கர்கள் தக்க தருணத்தில் நாட்டார் தங்கட்குரிய பாடங்களை நடத்தி முடித்ததனையும், நாட்டாருடைய இனிய குணம், சொல்வன்மை முதலியவற்றையும் கருதி அவர்பால் மிக்க அன்பு கொண்டிருந்தார்கள். ஆதலால், “ தாங்கள் உயர்நிலைப்பள்ளி வேலைக்குப் போகலாகாது ; கல்லூரியிலேயே இருக்கவேண்டும் ” என்று

சொல்லியதுடன் அனைவரும் சேர்ந்து கையெழுத்திட்டு நாட்டாரையே கல்லூரியில் தமிழாசிரியராக இருக்கச் செய்யவேண்டுமென்று நாட்டாருக்குத் தெரியாமலேயே கல்லூரித் தலைவர்க்கு மனுச் செய்தார்கள். கல்லூரியிலுள்ள மற்ற ஆசிரியர்கட்கும் இவர் கல்லூரியிலேயே இருக்கவேண்டுமென்பது விருப்பமாயிருந்தது. அவ்வருஷம் கல்லூரியை விடுத்துச் சீமைக்குப் போக இருந்த கல்லூரித் தலைவர்க்குத் தம்முடைய உயர்நிலைப்பள்ளியில் பண்டிதராயிருந்த ஒருவர்க்குக் கல்லூரிப் பண்டிதர் வேலையைத் தருவது இன்றியமையாக் கடப்பாடா யிருந்தமையின் அவருக்கே அவ்வேலையைக் கொடுத்து விட்டனர். உயர்நிலைப்பள்ளி வேலைக்கு மற்றொருவர் அமர்த்தப்பட்டு விட்டனர். ஆண்டு முடிவில் ரெவரெண்டு ஏ. எப். கார்டினர் துரை கல்லூரிக்கு வந்து சேர்ந்தபொழுது நிகழ்ந்த வரவேற்புக் கூட்டத்தில் நாட்டார் இருந்துவிட்டு நடுக்காவேரி வந்து சேர்ந்தனர்.

## கோயம்புத்தூரில் ஆசிரியர்

ஊர் வந்த சில நாட்களுக்கெல்லாம் கோயம்புத்தூர் செயிண்டு-மைக்கேல் உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு தமிழாசிரியர் தேவையென அறிந்து அதற்கு ஒரு மனு அனுப்பிவிட்டு, எஸ். பி. ஜி. கல்லூரியில் தம்மிடம் படித்த என். வி. சின்னசாமி ஐயர் என்பவர் கோயம்புத்தூரினர் என்ற நினைவு இருந்தமையால் அவருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்தனர். சின்னசாமி ஐயர் அப்பள்ளித் தலைவருக்கு மிக வேண்டியவரா யிருந்தமையால், உடனே நாட்டாரைப் பற்றி அவரிடம் சொல்லி உத்தரவு அனுப்பும்படி செய்தனர். கலா

சாலை திறக்கும்பொழுது நாட்டார் கோயம்புத்தூருக்குச் சென்று வேலையை ஒப்புக்கொண்டு சிலநாள் வரை சின்னசாமி ஐயர் வீட்டிலேயே தங்கி யிருந்தார். நாட்டார் தந்தையாருடைய துணையில்லாமல் முதல் முதல் வேற்றூருக்குச் சென்றது இப்பொழுதே. அக்கலாசாலை அதற்கு முந்தின ஆண்டு கல்லூரியாக இருந்து அவ்வாண்டிலே உயர்நிலைப் பள்ளியாக மாறிற்று. நாட்டார் மூன்றாவது பாரம் முதற்கொண்டு ஆறாவது பாரம் முடியப் பாடம் கற்பித்து வந்தனர். பள்ளித் தலைவராகிய (Father) பவுலாஞ்சர் என்பவர் நாட்டாரிடத்திலே மிகவும் அன்பு பாராட்டி, வேண்டும் உதவிகளும் செய்து வந்தனர். பள்ளிக்கூடத்து விளையாட்டுத் திடலில், தட்டுப்பந்து (Badminton) விளையாட்டில் கலாசாலைத் தலைவரும் நாட்டாரும் எதிரெதிராக முன்னணியில் நின்று கொண்டு ஏமாற்றுதற் கருத்துடன் விளையாடி மகிழ்வர். நாட்டாரிடம் அக்கலாசாலையில் பயின்ற மாணவர்களில் ஒருவராகிய திரு. ஆர். வி. இலட்சுமைய நாயுடு அவர்கள் நாட்டார்பால் மேலும் மேலும் அன்பு வளரப் பெற்றவராய், கடிதம் எழுதும்பொழுதெல்லாம் " அண்ணா !" என்றே விளித்து எழுதி வருவாராயினர்.

1909-ஆம் ஆண்டு பள்ளிக்கூடம் திறந்த சில மாதங்களுக்கெல்லாம் ஊரிலே பிளேக்கு நோய் (Plague) தோன்றிப் பரவிற்று. அதனால் ஊரெல்லாம் கலைந்துவிட்டது. நாட்டார் பள்ளிக்கூடத்திலேயே ஓர் அறையில் உறைவிடம் வைத்துக் கொண்டனர்.

## எஸ். பி. ஜி. கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்

திருவருட் செயலை அறியவல்லார் யாவர் ? அவ்வருடம் செப்டெம்பர் மாத இறுதியில் திருச்சி எஸ்.

பி. ஜி. கல்லூரியிலிருந்து அதன் காரியதரிசி திரு. அருளாநந்தமும், கணக்காசிரியர் திரு. எஸ். ஜோசப்பும் தனித்தனியாக எழுதிய கடிதங்கள் நாட்டாருக்குக் கிடைத்தன. அவற்றில், "கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர் வேலையை விட்டு விலகுகிறார்; தக்க திறமையும் தகுதியும் உடைய வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று துரை எங்களிடம் சொல்ல நாங்கள் தங்களைப் பற்றித் துரையிடம் சொல்லி அவர் உடன்பாடு பெற்று இக்கடிதம் தங்கட்கு எழுதுகிறோம்; தாங்கள் கட்டாயம் இவ்வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவற்றைப் பார்த்தவுடன் நாட்டார் திருவருட் செயலை உன்னிப்,(Father)பவுலாஞ்சர் துரையிடம் இச்செய்தியைத் தெரிவிக்க, அவர் நாட்டாரைப் பிரிய மனமில்லாதவரா யிருந்தும் நாட்டார் தம் ஊருக்குச் சமீபத்தில் கல்லூரித் தமிழாசிரியராய்ச் செல்லுவதனைத் தடுக்கலாற்றாது உடன்பட்டனர். பின், முறைப்படி திருச்சியில் அக்கல்லூரி திறந்த 1910-ஆம் வருஷம், ஜனவரி மாதம், 15-ஆம் தேதி முதல் நாட்டார் அக்கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியராய் இருந்து வருவாராயினர். அப்பொழுதுதான் இவர்தம் மனைவியாருடன் இல்வாழ்க்கை நடத்துதலை மேற்கொண்டார். நாட்டாருடைய கடைசித் தம்பியார் மு. கோவிந்தராச நாட்டார் அதற்குமுன் இரண்டாண்டுகளாக நடுக்காவேரிக்கு மேற்கே ஏழு மைல் தொலைவிலுள்ள திருக்காட்டுப்பள்ளி உயர்நிலைப் பள்ளிக்கு, தினந்தோறும் நடந்து சென்று (சைகிள், பஸ் முதலியன அக்காலத்தில் இன்மையால்) பயின்று வந்தவர் அப்பொழுது திருச்சிக்கு வந்து நாட்டாருடன்

இருந்து இரண்டாவது பாரத்திற் சேர்ந்து படித்து வருவாராயினர்.

## கற்பிக்கும் திறனும் புகழ் வளர்ச்சியும்

நாட்டார் கல்லூரியில் பாடங் கற்பிக்கும் காலங்களில் அவருடைய தோற்றமும், இன்சொல்லும், சொல்வன்மையும், குண நலங்களும் மாணவர்கள் யாவருடைய உள்ளத்தையும் கவர்ந்துவிடும். அவர்கள் இவர்பால் அளவுகடந்த அன்பும் மதிப்பும் உடையராய் இருந்து வந்தனர். இன்டர்மீடியேட்டு வகுப்பிற்குக் கட்டுரைக்கு உரிய பாடங்கள் கற்பிக்கும்பொழுது அவற்றைப் பெரும்பாலும் அவர்களையே படிக்கும் படியாக விடுத்துத் திருவள்ளுவர், கம்பர், முதலாய புலவர்களையும், மருத்துவம், சோதிடம் முதலிய கலைகளையும், சைவம், வைணவம், முதலிய சமயங்களையும், வேளாண்மை, வாணிபம், முதலிய தொழில்களையும், மற்றும் அறிவு வளர்ச்சிக்குரிய பலதிறப்பட்ட பொருள்களையும் பற்றிச் சொற்பொழிவு செய்து மாணவர்களுடைய பொது அறிவை வளர்ப்பார். பி. ஏ. வகுப்பிற்கு இரண்டாவது பகுதியில் தனியே தமிழ் எடுத்துக்கொள்ளுதற்குரிய ஆறுவது பிரிவிற்குச் சென்னை மாகாணத்தில், அக்காலத்தில் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் மாத்திரமே ஆண்டுதோறும் தொடர்ச்சியாகப் பல மாணாக்கர்கள் பயின்று வந்ததுடன் அதற்குரிய பதக்கம் பரிசில்களையும் பெற்று வந்தனர். அதனுல் தமிழைப் பற்றிக் கல்லூரிக்குச் சிறந்த பெயருண்டாயிற்று. கல்லூரித் தலைவரும் ஏனைய ஆசிரியர்களும் நாட்டாரிடத்தில் மேன்மேல் அன்பும் மதிப்பும் உடையவர்களாயினர்.

நாட்டார் மிகச் சிறந்த புலவர்—சிறந்த பக்திமான், மிகுந்த ஒழுக்கமுடையவர் என்பனவற்றை நன்கு உணர்ந்த மாணவர் அவரிடம் மிகவும் அடக்கத்துடனும் அமைதியுடனும் இருந்து பாடம் கேட்கலாயினர். மாணவர் அவரது செந்தமிழ் நடையிற் பெரிதும் ஈடுபட்டுக் கேட்டுக் கொண்டிருப்பர்.

இன்றும் உயர் பதவிகளில் உள்ள அவர் மாணவர் பின்வருமாறு கூறக் கேட்டிருக்கின்றோம் :—

" எங்கள் தமிழ் வகுப்புக்களில் நாட்டார் அவர்கள் பாடம் நடத்தும்பொழுது ஊசி விழுந்தால்கூட ஓசை கேட்கக்கூடியவாறு அவ்வளவு அமைதி நிலவி இருக்கும். அவர்களுக்குப் பெரும்பாலும் எல்லாப் பாடல்களும் மனப்பாடமாக இருந்தன. அவலச்சுவை, பக்திச்சுவை நிறைந்த பாடல்களை இசையோடு படிக்கும்போது அவர்கள் விழிகளில் நீர் ததும்பும். அப்பொழுது எங்களை அறியாது நாங்கள் உணர்ச்சி பெறுவோம். எங்தெந்தச் செய்யுளை எங்தெந்தச் சந்தத்தில் பாடவேண்டுமோ, அந்தந்த சந்தத்தில் நாட்டார் அவர்கள் பாடிக் காட்டுவார்கள் ; அவர்கள் பதம் பிரித்துப் படிக்கும்பொழுதே பொருள் தெரிந்து கொள்ளலாம். செய்யுட்களின் நயத்தை அவர்கள் தெரிவிப்பது மிக நயமாக இருக்கும். எங்கட்குத் தமிழ் மொழியில் என்றும் நீங்காத பற்றை உண்டாக்கிய பெருமை அவர்களையே சார்ந்தது." ஒவ்வொருவரும் தாம் நாட்டாரின் மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைவர்.

கல்லூரித் தலைவர், நாட்டாரின் திறமை கருதி, ஆங்கில ஆசிரியர்க்குக் கொடுக்கும் ஊதியம்போல் கொடுக்கவில்லையாயினும் தமிழாசிரியர்க்கு அக்காலத்

தில் கொடுத்துவந்த ஊதியத்தைவிட மிகுதியாகவே கொடுத்து வருவாராயினர்.

அக்காலத்தில் திருச்சியில் பல வாடகை வீடுகளில் குடியிருந்துவந்த நாட்டார், கடைசியாக, மலைக்கோட்டை தெற்கு வீதியில், தெற்கு நோக்கிய சிறிய மனை ஒன்று வாங்கி அதில் மிகவும் சிரமப்பட்டு முயன்று ஒரு சிறு வீடுகட்டி, அதற்கு "திருநாவுக்கரசு தமிழகம்" என்று பெயரிட்டு வாழ்ந்து வருவாராயினர். அவ்வீட்டிற்கு எதிர்ப்புறம் சைவசித்தாந்த சபையும், தாயுமானசுவாமி மடமும் இருக்கின்றன.

இவ்வாறிருக்கும் நாளில் 1930-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதி அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து ரூ. 150—10—250 ஊதியமுள்ள தமிழ்ச் சொற்பொழிவாளர் வேலைக்கு நியமன உத்தரவு வந்தது. நாட்டார் அவர்கள் நெடுங்காலமாகத் தாம் தொண்டுசெய்த எஸ். பி. ஜி. கல்லூரி (பிஷப்ஹீபர் கல்லூரி) வேலையை விடுத்து ஊதிய உயர்வு ஒன்றே கருதிப் புதிய வேலைக்குச்செல்ல அவ்வளவு விருப்பமில்லாதவராய் இருந்தார். மற்றும் தம்முடைய தாய் தந்தையர் முதிர்ந்த வயதினரா யிருக்கும்பொழுது அவர்களைத் தனியே விடுத்து அவ்வளவு தொலைவில் சென்றிருப்பது அவருக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் குறிப்பிட்ட தொடக்க ஊதியத்தை மாத்திரம் எஸ். பி. ஜி. கல்லூரியில் கொடுப்பதாயின் இங்கேயே தங்கிவிடலாமென எண்ணினர். அப்பொழுது கல்லூரிக்குப் புதிய தலைவராய் வந்திருந்த ஜேம்ஸ் துரை ஏனைய ஆசிரியர்களைக் கலந்தபொழுது அவர்கள் நாட்டாரால் கல்லூரிக்கு மிகவும் நல்ல பெயர் உண்டென்றும் அவர் இதனை

விடுத்துச் சென்றால் ஏதேனும் குறைவு நேரும் என்றும் சொன்னமையால் அவர் அந்த ஊதியம் ரூபாய் 150-ம் தருவதாகச் சொல்லி அக்கல்லூரியிலேயே இருக்கவேண்டுமென வேண்டினர். அதனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து உத்தரவை ஏற்றுக்கொள்ளாது திருச்சியிலேயே தங்கிவிட்டனர்.

## பெற்றோர் மறைவு

பின்பு 15—6—1931-ல் நாட்டாருடைய தந்தையார் முத்துச்சாமி நாட்டார் அவர்கள் நடுக்காவேரியில் சிவபதம் அடைந்தனர். 24—12—1932-ல் அன்னையாரும் சிவபதம் அடைந்தனர். நாட்டார் பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய பிற்கடன்களைக் குறைவர செய்து முடித்தனர்.

## பிஷப் ஹீபர் கல்லூரி வேலை முடிவு

அந்நாளிலே இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த புராட்டஸ்டென்ட் (Protestant) ஆராய்ச்சிக் குழுவினர் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை மூடிவிடுவதென முடிவுசெய்து, அதனால் மீதியாகும் தொகையையும் சேர்த்துச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியை வலுப்படுத்தி நல்ல வசதியான இடத்தில் அமைப்பது என முடிவுசெய்தனர். அதனால் 1933-ஆம் ஆண்டு மேமீ 31-ம் நாளுக்குப்பின்பு நாட்டாருக்கு அக்கல்லூரி வேலை இலதாயிற்று. இவர் பிஷப் ஹீபர் கல்லூரியில் 23 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராக இருந்திருக்கிறார்.

திருச்சிராப்பள்ளியில் நாட்டார் தங்கியிருந்த இந்த 23 ஆண்டுகளுக்குள் அவர் எழுதிய நூல்கள் பல.

கழகங்கள் பலவற்றில் தலைவராகவும் சொற்பொழி வாளராகவும், வேங்கட முதல் குமரிவரையில் உள்ள ஊர்களுக்கெல்லாம் அழைத்தவுடனே சென்று ஆற்றிய ஊதியங்கருதாச் சொற்பொழிவுகள் கணக்கிலடங்கா. இவைகளைப்பற்றிய விவரம் பின்னர்க் கூறுவோம்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரிய பதவி

இவர் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியின் வேலை முடிவுற்ற சமயத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ச் சொற்பொழிவாளர் தேவை என்று மீண்டும் விளம்பரம் வெளியானமையால் நாட்டார் அதற்கு மனுச்செய்தார். பல்கலைக் கழகத்தை நிறுவினவர் ஆகிய இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், நாட்டாருக்கு அவ்வேலை கிடைக்குமாறு விருப்பத்துடன் ஏற்பாடு செய்தனர். 13—8—1933-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வேலைக்கு உத்தரவு வந்தது. அன்றே திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்ப் பண்டிதர்களும், அன்பர்களும், பெருந்திரளாகக் கூடித் திருவாளர் T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நாட்டாருக்குச் சிற்றுண்டி விருந்து நடத்தி, "திரிசிரபுரத்துத் தமிழ்ப் பண்டிதர்களும், அன்பர்களும் அளித்த அன்பின் பரிசு" எனப் பெயர் பொறித்த வெள்ளிக் கூஜா ஒன்றும் அளித்து சிறப்பித்தார்கள். அந்த மாதம் 16-ம் நாள் அண்ணாமலை நகர் சென்று புதிய வேலையை ஏற்றுக் கொண்டு பணியாற்றி அங்கும் மாணவர் உள்ளங்களை, வழக்கம்போல் கொள்ளை கொண்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் நாட்டுப் பெரும்புலவர்களுக்கு உறைவிடமாக இருந்தது. தமிழ்ப்

பேராசிரியர்கள் கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம்.ஏ., எம்.எல்., ச. சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்., மஹாவித்வான் ரா. இராகவ ஐயங்கார், ஆர். பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார், நாவலர் பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார், சர்க்கரை. இராமசாமிப் புலவர் என்பவர்கள் தமிழகத்தில் பெயர்பெற்ற பெரும்புலவர்கள். அப்பொழுது அவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்தை அணிசெய்து வந்தனர்.

நாட்டார் அவர்கள், தமிழ்ப்புலவர் வகுப்பு மாணவர்களுக்கும், இன்டர்மீடியேட் பி. ஏ. மாணவர்களுக்கும், தமிழ் ஆனர்ஸ் வகுப்பு மாணவர்களுக்குமாக, ஆண்டுக்கொருமுறை மாறிமாறி தமக்குரிய பாடங்களை நடத்தி வருவாராயினர். எல்லா வகுப்பு மாணவரும் நாட்டார் போதனையில் பெரிதும் ஈடுபட்டனர். எப்பொழுதும் நகைச்சுவையே உண்டாக்கும் ஆசிரியர் போலன்றி, நாட்டார் ஒன்பது சுவைகளும் தோன்றுமாறு பாடம் கற்பிப்பவர். ஆதலினால் மாணவர் அவரிடம் மிக்க அன்பும் மதிப்பும் உடையவராயினர். அவரது பெருந்தன்மை, பெரும்புலமை, வீண்பேச்சுப் பேசாமை, ஒழுக்கமுடைமை, தெய்வ பக்தி முதலிய நற்பண்புகள் மாணவர்க்கு முன்மாதிரியாக விளங்கின.

இங்ஙனம் பாராட்டுப்பெற்ற நாட்டார் அவர்கள் 30—6—1940-ல் தமது 56-வது வயதில் அப் பல்கலைக் கழக வேலையிலிருந்து ஓய்வுபெற்றுக் குடும்பத்துடன் நடுக்காவேரி வந்து, பின்பு 22—7—1940 முதல் தஞ்சை நகரிலே உறைவிடம் அமைத்துக்கொண்டு வாழ்ந்து வருவாராயினர்.

## கரந்தைப் புலவர் கல்லூரித் தலைமைப் பதவி

அப்பொழுது தொடங்கப் பெற்றக் கரந்தைப் புலவர் கல்லூரிக்கு, இவரது ஒப்புயர்வற்ற அறிவையும் அநுபவத்தையும், பயன்படுத்திக்கொள்ள நினைத்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த செந் தமிழ்ப் புரவலர், தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 2–7–1941 முதல் நாட்டார் அதன் முதல் தலைவராக, ஊதியம் கருதாமலே (Honorary Principal) பணி யாற்றி வந்தனர்.

நாட்டார் இங்ஙனம் ஆசிரியராக இருந்து கற்பிக் கும் காலங்களில் மாணவர்களின் தேர்வுக்குரிய தமிழ்ப் பாடங்களை அவர்கள் கற்றால்போதும் என்று எண்ணாமல் பிற பாடங்களையும் நன்கு கற்கும்படியும் அவர்கள் வாழ்க்கையில் மேம்படுதற்குரிய ஊக்கமும் முயற்சியும் உடையராய் இருக்கும்படியும் அடிக்கடி தூண்டுவர். மாணாக்கருடைய நலங்குறித்துக் கடவுளை வேண்டுதலும் செய்வர்.

நாட்டாரிடம் கற்ற மாணாக்கர் பலர் நெடுங்காலம் சென்றும், "யான் நாட்டாருடைய மாணாக்கன்" என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்வர்.

# 4. தமிழ்த்தொண்டும் புகழும்

## தொடர்புடைய கழகங்கள்

### 1. கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

1911-ஆம் ஆண்டு மேமீ தஞ்சையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது. திருச்சிராப்பள்ளியில் உத்தியோகங்களில் அமர்ந்திருந்த அச்சங்கத்தின் பல சிறந்த உறுப்பினர் நாட்டாருக்குப் பழக்கம் ஆயினமையால், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொடர்பு சங்கம் ஏற்பட்ட சில திங்கட்குள்ளாகவே உண்டாயிற்று. பின்னர், திருச்சியில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கிளைச்சங்கம் ஒன்று நிறுவப்பெற்றது. கிளைச் சங்கத்து உறுப்பினர்களே பெரும்பாலும் தாய்ச்சங்கத்து வேலைகளையும் கவனித்து வந்தார்கள். இவர்கள் சங்கச் சார்பான ஒவ்வொரு செயலையும் நாட்டாருடன் கலந்து சூழ்ந்தே செய்துவந்தனர். சங்கத் தொடர்பு ஏற்பட்ட பிறகு, 'வழக்கறிஞர்', 'நிலக்கிழவர்', 'கண்காணியார்', 'பொறிவலாளர்', 'ஆவணக்களரி', 'கல்லூரி', 'திருவாளர்' என்பன போன்ற சொற்கள் நாட்டாராலேயே முதன் முதலில் தமிழில் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டன. திருமண அழைப்பு முதலாயின முதன் முதல் அவராலேயே நல்ல தமிழில் எழுதப்பெற்றன.

திருச்சியில், கரந்தைக் கிளைச்சங்க உறுப்பினர்கள் பலர் நாட்டாரிடம் தமிழ் நூல்களை முறையாகப்

பாடம் கேட்டுவந்தனர். திருக்குறள், புறநானூறு, பத்துப்பாட்டு முதலியனவும், நன்னூல், தொல்காப்பிய எழுத்ததிகாரம் முதலியனவும் பாடம் நடத்தப்பட்டன. திருவாளர்கள் இராம. நடேச பிள்ளை, ம. பெரியசாமி பிள்ளை, கூரத்தாழ்வார் முதலியார், என். துரைசாமி பிள்ளை, சுப்பராய முதலியார் முதலானவர்கள் அப்பொழுது பாடங்கேட்டவர்களில் சிலர் ஆவர்.

அக்காலத்து நாட்டார் அவர்கட்கு, மிகவும் பழக்கமாக இருந்த பொறிவலாளர், திருவாளர் பா. வே. மாணிக்க நாய்க்கர், பி.இ., எம்.சி.ஐ., எம்.ஐ.இ., அவர்கள் நாட்டார்மூலம் கரந்தைக் கிளைச் சங்கத்தாரிடம் நெருங்கிய பழக்கமுடையவராயினர். நாய்க்கர் அவர்கள் தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யும்போது தமக்கு ஏற்படும் ஐயங்களை நாட்டாரிடம் உசாவித் தெளிந்து கொள்வர். நாட்டார் கிளைச்சங்க உறுப்பினர்கட்குப் பாடம் கற்பித்ததுடன் அன்றி அடுத்தடுத்துச் சொற்பொழிவுகள் ஆற்றியும்வந்தார். தாய்ச் சங்கத்தில் நிகழும் சிறப்புக் கூட்டங்கட்குச் சென்று தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும், சங்கத்தோரையும் அவையோரையும், மகிழ்வித்துவருவர். சங்கத் தலைவராயிருந்த திருவாளர் த. வே. உமாமகேசுரம் பிள்ளை அவர்கட்கும், மற்றைய உறுப்பினர்கட்கும் நாட்டார் பால் அன்பு மேன்மேல் பெருகி வளர்வதாயிற்று.

## 2. திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை

நாட்டாரவர்கள் திருச்சிராப்பள்ளிக்கு வந்த பிறகு அதுவரை சரியாய் நடைபெறாதிருந்த சைவ சித்தாந்த சபை நன்கு நடக்கத் தொடங்கியது. நாட்டார்

அடிக்கடி அச்சபையில் சொற்பொழிவுகள் செய்து வந்தனர்; சபை உறுப்பினர், பெரிய புராணம் முதலிய சைவ நூல்களை அவரிடம் முறையாகப் பாடம் கேட்டுவந்தனர்.

## 3. திருச்சிராப்பள்ளித் தமிழ்ப் பண்டிதர் மாநாடு

திருச்சியில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கிளைச் சங்கத்தோடும் சைவ சித்தாந்த சபையோடும் தொடர்புகொண்டு பணியாற்றிவரும் நாளில் தமிழ் வளர்ச்சியையும் தமிழாசிரியரின் நிலையை உயர்த்து தலையும் குறிக்கோளாகக் கொண்டு நாட்டார் அவர்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்
(திருநெல்வேலி)

நடுக்காவேரி,
முத்துசாமி நாட்டார் திருமகனுர்
பண்டித வேங்கடசாமி நாட்டாரவர்களுக்கு
"நாவலர்"
என்னும் பட்டம் சீர்மிக வழங்குகின்றது.

(தொழிற்கழகத்தார் ஆணைப்படி)
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
அமைச்சர்.

"ஏழாவது தமிழர் மாநாடு"
மெய். எகஅ, மார்கழி ௯
24—12—1940

கள் 1923, 24, 25-ஆம் ஆண்டுகளில் திருச்சிராப்பள்ளியில் மூன்றுமுறை தமிழ்ப்பண்டிதர் மாநாடு சிறப்பாக நடைபெறச் செய்தார். தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து தமிழாசிரியர்கள் மாநாட்டிற்கு வந்

திருந்தனர். அப்பொழுது திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர், பி.இ., அவர்களும் திருவாளர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம்.ஏ., பி.எல்., அவர்களும் மாநாடுகள் நிகழ்வதற்கு உறுதுணையாயிருந்தனர்.

24—12—40-ல், சென்னையில், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் சார்பில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு நடந்தது. இப்பேரவையில் நாட்டாருக்கு "நாவலர்" என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

இத் தமிழ்ச் சங்கத்திற்கு, 41, 42-ஆம் ஆண்டுகளில் உதவித் தலைவராகவும், 43-ஆம் ஆண்டில் தலைவராகவும் நாட்டார் இருந்தனர்.

## 4. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

இக் கழகத்தைச் சார்ந்த சைவ சித்தாந்த சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா 30–12–1922ல் நாட்டாருடைய தலைமையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அது முதலாக அந்நூற்பதிப்புக் கழகத்தின் தொடர்பு நாட்டாருக்கு உளதாயிற்று. 1923-ஆம் ஆண்டு முதல் அக்கழகத்தாரால் சிறந்த முறையில் நடத்தப்பட்டுவருகின்ற "செந்தமிழ்ச் செல்வி" என்னும் திங்கள் வெளியீட்டிற்கு, நாட்டார் அதன் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினருள் ஒருவராகத் தொடக்க முதல் இருந்துவந்தனர். 1939-ஆம் ஆண்டு முதல் அக்கூட்டத்திற்குத் தலைவராக இருந்துவந்தனர். தொடக்க முதல் இவருடைய கட்டுரைகள் அத்திங்கள் வெளியீட்டை அழகுசெய்து வந்தன.

## 5. சைவ சித்தாந்த மகா சமாஜம்

சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜம் என்னும் பெயரில் ஒரு கழகம் நிறுவப்பட்டு நடைபெற்று வருகிறது. அதன் சார்பில் "சித்தாந்தம்" என்னும் மாதத்தாள் நடத்தப்படுகிறது. நாட்டார் அச்சமாஜ உறுப்பினருள் ஒருவர். அவர் சைவ சமயத்தைப்பற்றிய பல கட்டுரைகளை சித்தாந்தத்தில் வரைந்துள்ளனர். கரந்தையில் நடைபெற்ற சமாஜத்தின் ஆண்டு விழாவில் தலைமை தாங்கினர். அச்சமாஜம் ஆண்டு தோறும் கூட்டும் ஆண்டுவிழாக் கூட்டங்களிற் கலந்து கொண்டு சமயச் சொற்பொழிவாற்றி வந்தனர்.

# தமிழ்ப் பணி

## 1. கல்லூரி மாணுக்கர்கட்கு ஆற்றிய தமிழ்ப் பணி

அந்நாளில் திருச்சியிலிருந்த மூன்று கல்லூரிகளின் மாணுக்கர்களிலும் விருப்பமுடையவர் படித்துத் தமிழறிவை வளர்த்துக் கொள்ளுமாறு நாட்டாரும், சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் அ. சிவப்பிரகாசம் பிள்ளை முதலிய சில தமிழாசிரியர்களும் சேர்ந்து ஒரு பொதுவிடத்தில் வாரத்திற் சில நாட்கள் நன்னூல், திருக்குறள், முதலாயினவற்றைக் கற்பித்து வந்தார்கள். அப்பொழுது திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், திருப்பூர் வழக்கறிஞர் டி. ஆர். சுந்தரம் பிள்ளை அவர்களும் இம்மாணுக்கர்களுடன் இருந்து பயின்றதோடு அமைச்சர்களாகவும் பணியாற்றி வந்தார்கள்.

## 2. தனித் தமிழ்க் கல்லூரிக்கான முயற்சிகள்

1921-ஆம் ஆண்டு நாட்டாருக்குத் தனித் தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவப்பெறல் வேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. அதற்காக அவர் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு :—" இந்நாட்டில் இக்காலத்தில் இருந்துவரும் கல்விமுறை பெரிதும் பிழைபாடுடையதென்று அறிஞர் பலராலும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. தமது தாய்மொழியைக் கைவிடுத்து வேற்று நாட்டு மொழியாற் கல்வி கற்றுவரும் புதுமை இவ் விந்திய நாட்டில் மாத்திரமே காணப்படுகிறது. பல கலையுணர்வும் பெற்று அரிய செயல்கள் செய்தற் பொருட்டன்றோ கல்வி கற்பது? இப்பொழுதோ மாண வர்கள் வெறும் மொழிப் பயிற்சியின் பொருட்டே தமது கட்டிளமைப் பருவமெல்லாம் செலவிட்டுக் கலையுணர்வு பெறுதலின்றி உடலுரமும் குன்றுகின்றனர். மாணவர்கட்கு இருக்கவேண்டிய நற்குண நல்லொழுக்கங்கள் அருகி வந்துகொண்டிருக்கின்றன. மத வுணர்வு சிறிதும் பெறுதலின்மையால் அவர்கட்குத் தெய்வ நம்பிக்கையும் குன்றிவிட்டது. ஆசிரிய— மாணவர்களின் சம்பந்தம் பெரும்பாலும் உருக்குலைந்து நிற்கிறது. இவ்வாறாக நிகழ்ந்துள்ள குறைபாடுகளுக்கு ஓர் எல்லை இல்லை. இந்நிலைமையில் வறிதே காலந்தாழ்த்தாது நம் நாட்டுக் கல்வி முறையைத் திருத்துவது இந்திய நன் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ள கடனாகும்."

இக்கடனுணர்ச்சியுடன் நாட்டார் அவர்கள் குருகுலம் போன்ற கல்லூரி ஒன்றினைத் 'திருவருட் கல்லூரி' என்னும் பெயரால் தாமே நிறுவத் துணிந்து

அதன் பொருட்டுத் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் கையொப்பமும் வாங்கி வருவாராயினர். ஆனல் அந் நாளிலே, திரு. வ. வே. சு. ஐயர் அவர்களால் தொடங் கப்பெற்ற ‘ குருகுலம் ’ என்னும் கல்விச்சாலை நடை பெறுதற்கு ஏற்பட்ட தடைகளை நினைத்தும், தாம் குடும் பத்தையும், கல்லூரி ஆசிரியப் பதவியையும் விடுத்துத் தனியாக இதன்பொருட்டு முயலுதல் தம் நிலைமைக் குப் பொருத்தமில்லாமையை உணர்ந்தும் அம்முயற்சி யைக் கைவிட்டனர்.

## 3. தமிழ்ப் பல்கலைக் கழக முயற்சி

1925-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் நாளிலே தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அப்பொழுது சென்னை அரசாங்கத்தில் அமைச்சராயிருந்த, திவான் பகதூர் டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைமை யிற் கூடிய ஒரு கூட்டத்தில், தமிழர்கட்குத் தனியே ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பெறல் வேண்டும் என முடிவு செய்து அம்முயற்சியைத் தொடர்ந்து நடத்து வதற்கெனப் பன்னிருவர் அடங்கிய கழகம் ஒன்று அமைக்கப்பெற்றது. அக்கழக உறுப்பினருள் நாட்டா ரும் ஒருவராவர். இக்கழகம் செய்த முயற்சியின் பயனுக, 24—10—1925-ல் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றத்தில் (Senate) தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுதற்கு வேண்டிய முயற்சியை அரசிய லார் மேற்கொள்ள வேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அரசிய லார், இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்கசேதுபதி அவர்கள் தலைமையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி

ஆய்ந்து முடிவு செய்ய ஒரு குழுவை நிறுவினர். அக்குழுவிற்கு Sir P. T. ராஜன் அவர்கள் செயலாளராய் இருந்தார். அக்குழுவினர் விடுத்திருந்த கேள்விகளுக்கு நாட்டார் தக்க விடையளித்தனர். நேரில் விசாரித்த பொழுதும், நாட்டார், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இன்றியமையாமையைப் பற்றி அக் குழுவினர்க்கு விளக்கிக் கூறினர்.

ஆனல் இராஜா சர் அண்ணமலைச் செட்டியார் அவர்கள், சிதம்பரத்தில் நிறுவி, நடத்திவந்த மீனட்சி தமிழ்க் கல்லூரியையும் அதன் உறுப்பாக இருந்த கீழ் நாட்டு மொழிப் பண்டிதர் பயிற்சிக் கல்லூரியையும் ஒன்று சேர்த்து அரசியலாரின் இசைவு பெற்று, அண்ணமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவினமையால், தமிழ்மொழி, தமிழர் நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அதுவே அமையும் என்னும் கருத்தால் முன்பு மேற்கொண்ட முயற்சி நெகிழ விடப்பட்டது.

## 4. விரிவுரைகள்

நாட்டார் சொற்பொழிவு நிகழ்த்தும்போது தாம் கூற எடுத்துக் கொண்ட பொருளை,

> **" கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்**
> **வேட்ப மொழிவதாம் சொல் "**

என்னும் குறளுக்கு இலக்கியமாக, நிரல்படக் கோத்த சொற்களால், இனிமையும், தெளிவும் அமைந்த குரலால், குறித்தகால அளவில் பேசி முடிப்பர். பேசுங்கால், நடத்தல், கையாட்டல், கனைத்தல், அசைதல் போன்ற வேண்டாச் செய்கைகளை அவர் பால் காண்பது அரிது. கூறியன கூறுமலும், ஒருமைப்

பன்மை மயக்கம் முதலாகிய இலக்கண வழுக்கள் இன்றியும், உயர்ந்த தனித் தமிழ் நடையில், பேசுவதைக் கேட்பவர்கள் அச்சொற்பொழிவை திருத்தமின்றி அவ்வாறே அச்சிட்டுவிடலாம் எனக் கூறுவர்.

இங்ஙனம் சிறந்த சொற்பொழிவாளராயும், தமிழ்ப்பணி செய்வதில் விருப்பமும் அதற்கேற்ற இனிய குணமும் உடையராயும் இருந்தமையால் தமிழ் நாட்டிலுள்ள பற்பல கழகங்களிலும் சொற்பொழிவாற்றுதற்கு நாட்டாரை விரும்பி அழைப்பர். இவரும் தம் உடல் உழைப்பு, நோய் முதலியவற்றைக் கருதாமல் பல இடங்கட்கும் சென்று சொற்பொழிவுகள் செய்தும் சங்க விழாக்களிலே தலைமை தாங்கியும் பணி செய்து வந்தார். தமிழ் நாட்டில் இவர் சொற்பொழிவாற்றிய இடங்கள் நூற்றுக்கணக்கானவை.

நாட்டார் தலைமை தாங்கிய கழகங்களிற் சில பின் வருமாறு :—திருநெல்வேலிச் சைவ சித்தாந்த சங்கம், சாத்தூர் தமிழ்ச் சங்கம், குளித்தலைக் கம்பன் செந்தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை, பூவாளூர்ச் சைவ சித்தாந்த சபை, பலவான்குடி மணிவாசக சங்கம், மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மாணவர் கழகம், சைவ சித்தாந்த மகா சமாஜம், இளங்காடு மாணவர் செந்தமிழ்ச் சங்கம், முருகன் செந்தமிழ்க் கழகம், தென்காசி திருவள்ளுவர் கழகம்.

1930-ஆம் ஆண்டு, பிப்ரவரி 11, 12, 13, 14-ஆம் நாட்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பிலே தொல்காப்பிய ஆராய்ச்சி என்னும் தலைப்பில், முறையே (1) நூலாசிரியர் வரலாறு (2) எழுத்தா

ராய்ச்சியும் சொல்லாராய்ச்சியும் (3) தமிழ்ச் செய்யுட் களும் நூல்களும் (4) பொருளாராய்ச்சி (மண முறை கள்) என நிகழ்த்திய நான்கு சொற்பொழிவுகளும் அறிஞர் அனைவராலும் பாராட்டப்பட்டன. அண்ணு மலை நகரிலும், பல்கலைக் கழகச் சார்புச் சொற் பொழிவுகளாக, சிலப்பதிகார ஆராய்ச்சி முதலியன நாட்டாரால் நிகழ்த்தப்பட்டன.

1939-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கொழும்பி லுள்ள அன்பர்களால் அழைக்கப்பெற்று இவர், திரு. அ. ச. ஞானசம்பந்தனுடன் சென்று ஆங்குள்ள விவேகானந்த சங்கம், முதலியவற்றில் சொற்பொழிவு செய்து மீண்டனர்.

9—3—1940-ல் சென்னையில் நடந்த கலித்தொகை மாநாட்டின் தலைவராக இருந்து அரிய விரிவுரை நிகழ்த்தினர்.

1940-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் 21, 22-ஆம் தேதிகளில், திருப்பதியில் நடந்த அனைத்திந்தியப் பத்தா வது கீழ்த்திசைக் கலை மாநாட்டிற்குச் சென்று இவர், வஞ்சிமா நகரைப்பற்றி நிகழ்ந்த ஆராய்ச்சிச் சொற் போரில் கலந்து கொண்டனர்.

## 5. திருச்சி வானொலிப் பேச்சுக்கள்

திருச்சி வானொலியில் பின்வரும் இலக்கியச் சொற்பொழிவுகள் நாட்டார் அவர்களால் நிகழ்த்தப் பெற்றன :—

1. 21- 6-1939 தமிழிலக்கியங்களிற் காணப்படும் இசைப்பகுதிகள்.
2. 29-10-1939 வீரச்சுவை.

3. 1-12-1939 அவலச்சுவை.
4. 16-12-1939 இன்பச்சுவை.
5. 7- 4-1940 நகைச்சுவை.
6. 12- 6-1940 பிற்காலப் புலவர்களின் சுடுசொல் ஆட்சி.
7. 23-11-1940 யாப்பியல் அமையாச் செய்யுள்.
8. 30- 5-1941 தாய்மொழி.
9. 10-10-1941 இளங்கோவடிகளும் இயற்கைப் புனைவும்.
10. 21- 8-1942 கலித்தொகை.
11. 29- 1-1943 மனோன்மணீயம்.

## 6. நூல்களும் உரைகளும்

நாட்டார் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருந்தபொழுது செந்தமிழ்ப் புலவர் திரு வாளர் மு. இராகவ ஐயங்கார் அவர்களால் எழுதப் பெற்ற "வேளிர் வரலாறு" என்னும் ஆராய்ச்சி நூல் இன்டர்மீடியேட் வகுப்புக்குப் பாடமாக வைக் கப்பட்டிருந்தது. நாட்டார் அதனைப் பாடம் நடத்திய பொழுது அதன் முடிவுகளெல்லாம் தவறுனவை என தமக்குத் தோன்றியமையின், அவற்றை மறுத்து 1915-ஆம் ஆண்டில் "வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி" என்னும் பெயருடன் ஒரு நூல் எழுதினர். இந்நூற் பொருள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மூன்ருவது ஆண்டுவிழாவிற் கூடிய பேரவையில் சொற்பொழி வாக நாட்டாரால் விரித்துக் கூறப்பட்டது. பின்னர் நூல்வடிவில் வந்த அதனைக் கண்ணுற்ற தமிழ்ப் புலவர் பலரும் நாட்டாருடைய அறிவாராய்ச்சித் திறங்களை வியந்து பாராட்டினர்.

1919-ஆம் ஆண்டில் 'நக்கீரர்' என்ற அரிய ஆராய்ச்சி நூல் இவரால் எழுதி வெளியிடப்பட்டது. 1921-ஆம் ஆண்டில் 'கபிலர்' என்னும் ஆராய்ச்சி நூலையும் அம்முறையிலேயே எழுதி வெளியிட்டார். இவ்விரு நூல்களும் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலும், காசி இந்து பல்கலைக் கழகத்திலும் உள்ள உயர் வகுப்புகட்கும், லண்டன் பல்கலைக் கழகத்து B. A. வகுப்புக்கும் பாடமாக வைக்கப்பட்டு வந்தன.

1923-ஆம் ஆண்டு "கள்ளர் சரித்திரம்" என்ற அரிய ஆராய்ச்சி நூல் எழுதி வெளியிடப்பட்டது. பண்டு உயர்நிலையிலிருந்து கல்வி முதலியவற்றில் பிற்போக்கடைந்து வந்த தம்முடைய மரபினரின் முன்னேற்றங் கருதி இந்நூல் எழுதப்பெற்றதாகும். இந்நூல் ஒரு மரபினரைப்பற்றி எழுதப்பட்டதாயினும் தமிழர்கள் பொதுவாக அறிந்துகொள்ள வேண்டிய பல அரிய கருத்துக்களைத் தன்னகத்துக் கொண்டுள்ளது. தமிழ் ஆராய்ச்சி செய்வார்க்கு இந்நூல் மிகவும் பயனுடையதாய் இருக்கின்றது.

1925-ஆம் ஆண்டில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்கக் கீழ்க்கணக்குகளில், "இன்னா நாற்பது", "களவழி நாற்பது", "கார் நாற்பது" என்பவற்றிற்கும், 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்', 'வெற்றிவேற்கை', 'மூதுரை', 'நல்வழி', 'நன்னெறி' என்னும் பிற்கால நீதி நூல்களுக்கும் திருந்திய முறையில் உரையும், முகவுரையும் நாட்டாரால் எழுதி அளிக்கப்பட்டன.

18—4—1925-ல் அகத்தியர் தேவாரத் திரட்டு உரையைத் திருத்திக் கழகத்திற்கு அனுப்பினர்.

30—11—1925-ல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் வேண்டுகோட்கிணங்கப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்திற்கு நாட்டார் உரை எழுதத் தொடங்கித் தமக்குச் சிறந்த நண்பரும், நல்ல புலமை உடையவரும் ஆகிய திருவாளர் அ. மு. சரவண முதலியார் அவர்களைத் துணையாகக் கொண்டு எழுதி வந்து 7—2—1931-ல் அவ்வுரையை முடித்து அளித்தனர். இதற்கிடையே 1926-ஆம் ஆண்டில் "கண்ணகி வரலாறும்—கற்பு மாண்பும்" என்னும் ஆராய்ச்சி நூலும், 1928-ஆம் ஆண்டில் "சோழர் சரித்திரம்" என்னும் வரலாற்று நூலும் நாட்டாரால் எழுதப் பட்டன.

பாகனேரித் தன வைசிய இளைஞர் சங்க வெளியீடாக அச்சிடுதற்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு என்னும் மூன்று நூல்கட்கும் உரையெழுதித் தருமாறு திருவாளர் பாகனேரி வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் நாட்டாரைக் கேட்டுக் கொண்டனர். நாட்டார் இதனை ஏற்று 11—11—1940-ல் சிலப்பதிகார உரையைத் தொடங்கி எழுதி வந்து 9—3—1942-ல் முடித்தனர். இவ்வுரையானது தமிழறிஞர் பலராலும் பாராட்டப்படுவதனை யாவரும் அறிவர். சிலப்பதிகார உரை தொடங்கிய சில திங்களுக்குப் பின் அகநானூற்று உரையும், அது தொடங்கிய சில திங்களின் பின் மணிமேகலையுரையும் தொடங்கப்பெற்றன.

இடையே நாட்டார் திருச்சி அகில இந்திய வானொலியிற் பேசியனவும், 'செந்தமிழ்ச் செல்வி', 'தமிழ்ப்பொழில்' முதலியவற்றில் வெளியிட்டனவுமாகிய கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்துக்

கட்டுரைத் திரட்டு—பகுதி I என்னும் பெயரால் வெளியிட்டார்.

நாட்டார் அகநானூற்று உரையினைத் திருவையாற்று அரசர் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்த கரந்தைக் கவியரசு திருவாளர் ஆர். வேங்கடாசலம் பிள்ளை அவர்களைத் துணையாகக்கொண்டு எழுதி முடித்தனர்.

மணிமேகலைக்கு உரை யெழுதத் தொடங்கி 26 காதைகளுக்கு எழுதி முடித்தனர்.

4—9—1940-ல் தண்டியலங்காரம் பழைய உரையைத் திருத்தி முடித்துக் கழகத்திற்கு அனுப்பினர்.

## 7. கட்டுரைகள்

செந்தமிழ், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், தமிழர், கலா சிந்தாமணி, விவேகோதயம், பூரண சந்திரோதயம், குமரன், நச்சினர்க்கினியன், தாய்நாடு, ஈழகேசரி, ஆனந்தபோதினி முதலிய பத்திரிகைகளில் நாட்டார் கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவைகளுள் “ தமிழ்ப்பொழில் ”, “ செந்தமிழ்ச் செல்வி ” என்பவற்றுள் இவர் எழுதிய கட்டுரைகள் மிகப் பலவாகும்.

## 8. பல்கலைக் கழகத் தமிழ்க் குழு—உறுப்பினர் தேர்வாளர்

சென்னைப் பல்கலைக் கழகத்தில், கல்லூரிப் பாடத் திட்டங்களை வகுக்கவும், பாட நூல்களை வைக்கவும் பல குழுக்கள் உண்டு. அவற்றுள் தமிழ்க் குழு ஒன்று. அக்குழுவில் நமது நாட்டார் பல ஆண்டுகள் உறுப்

பினராக இருந்து நல்ல தமிழ்ப் பாட நூல்களைத் தேர்ந் தெடுக்க உதவி புரிந்தார்; வித்துவான் தேர்வுக்குரிய பாட திட்டத்தை அமைக்கவும் உதவி செய்தார்.

நாட்டார் பல ஆண்டுகள் இன்டர்மீடியேட், பி. ஏ. தேர்வுகட்குத் தேர்வாளராய் இருந்தார்; 1932 முதல் 1934 வரையிலும், 1942 முதல் 1944 வரையிலும் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வாளராக இருந்தார். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்த பொழுது அதன் தமிழ்த் தேர்வுகட்குத் தேர்வாளராக இருந்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதத் தேர்வுக்கு, ஆண்டுதோறும் ஊதியமில்லா (Honorary) தேர்வாள ராக இருந்து இலக்கியம், இலக்கணம், தருக்கம் முதலியவற்றுக்கு வினுத் தாள்கள் கொடுத்துவந்தனர்.

காசி இந்து பல்கலைக் கழகத்திலும் இரண்டுமுறை தேர்வாளராக இருந்தனர்.

## நாட்டாரின் நற்பண்புகள்

இவர் எதனையும் காய்தல் உவத்தல் இன்றி நடு நின்று ஆராய்ந்து உண்மை கண்டு கூறுதலும், உண் மைக்கு மாறுனவற்றைத் தமக்கு நண்பர்களும் பெரு மதிப்பு உடையவர்களும் கூறினும் ஏற்றுக்கொள்ளா மையும் ஆகிய இயல்புடையவர்.

நாட்டார் சைவ சித்தாந்த நூல்களில் அழுத்த மான பயிற்சியும், சைவ சமயத்தின்பால் பெருமதிப் பும் உடையவர்; சிவபிரானிடத்தும் அடியார்களிடத் தும் ஆரா அன்புடையர்; அன்னராயினும் வேறு எச் சமயத்தினையும் சமய நெறியில் நிற்போரையும் வெறுப் பவர் அல்லர்; அங்ஙனமே பிறப்பினுல் உயர்வு தாழ்வு

கருதாது யாவரையும் மதித்தொழுகும் தன்மை வாய்ந் தவர்; செருக்கென்பது சிறிதும் இல்லாதவர்; யாருட னும் இனிமையாகக் கலந்து பழகும் மக்கட் பண்பு உடையவர்; அறம் செய்தலில் விருப்பமுடையவர். பயனில்சொல் பேசுதல், வீண்பொழுது போக்கல், பிறர் ஆக்கம் கண்டு பொறுமைப்படுதல் முதலிய தீய இயல்புகள் அணுகுதற்கும் இடங்கொடாத பண் புடையவர்.

## நாட்டாரின் நண்பர்கள்

தமிழ் நாட்டிலே நாட்டாருக்குப் பல ஆண்டு களாக நண்பர்களாக இருந்தவர்கள் அளவற்றவ ராவர்.

நாட்டார் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகட்குப் படித்த காலத்திலும், பின்னர் சில ஆண்டுகள் வரை யிலும் நாள் தவருமல் அவரைப்பற்றிப் பேசி மகிழ்ச்சி யடையும் இயல்பினரா யிருந்தவர்கள் நடராச ஐயர் என்னும் ஒரு வீரசைவ ஆசிரியரும், திரு. ஐ. சாமிநாத முதலியார் அவர்களும் ஆவர்.

அரித்துவாரமங்கலம் பெருநிலக்கிழவரும் தமிழ்ப் புலவருமாயிருந்த திருவாளர் வா. கோபாலசாமி ரகு நாத ராசாளியார் அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத் துத் தலைவர் திருவாளர் பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்கள், சோழவந்தானூரில் இருந்த நுண்மாண் நுழைபுலமுடைய புலவராகிய அரசஞ் சண்முகனார் அவர்கள் நாட்டார்பால் மிக்க அன்புடையவர்களாய்ப் பழகிவந்தனர். ஐ. சாமிநாத முதலியார், இராசாளி யார், பாண்டித்துரைத் தேவர், அரசஞ் சண்முகனார்

முதலானவர்கள் இப்பொழுது இல்லையே எனப் பிற் காலங்களில் நாட்டார் வருந்திக் கூறுவதுண்டு.

மற்றும் பல சங்க விழாக்களில் நாட்டாருடன் அளவளாவுதற்குரியவராய் இருந்தவர்கள் :—

திருவாளர்கள் எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை, எம். எல். பிள்ளை என அழைக்கப்படும் கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஞானி யார் மாணவர் ம. ரா. குமாரசுவாமி பிள்ளை, சைவப் பிரசாரகர் பொ. முத்தையாப் பிள்ளை, மறைமலையடி கள், பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், கரந்தைக் கவியரசு ஆர். வேங் கடாசலம் பிள்ளை, டி. வி. சதாசிவ பண்டாரத்தார், அ. கார்மேகக்கோனார், புலவர்ஏறு ஆசிரியர் அ. வரத நஞ்சைய பிள்ளை, தமிழ்ப் பெரும்புலவர் பண்டித அ. கந்தசாமி பிள்ளை முதலியவர்கள் ஆவர்.

## நாட்டாரின் மாணக்கர்கள்

நாட்டாரின் மாணக்கன் என்று வீறுபெற்று விளங்குபவர்களில் முதன்மையானவர் வீ. உலக ஊழி யர் அவர்கள் ஆவார். இவர் 1922-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டார் அவர்களை உரத்தூர் என்னும் கிரா மத்தில் கண்டு தனக்குக் கல்வி கற்பதில் விருப்பம் இருக்கிறது என்பதைத் தெரிவித்தவுடன் நாட்டார் அவர்கள் அப்பொழுது 17 வயதுடையவரா யிருந்த அவரைத் தம்முடன் திருச்சிக்கு அழைத்துவந்து தம் வீட்டில் உண்டியும், உறையுளும் கொடுத்து தமிழ்ப் பாடங்கள் கற்பித்துவந்தார். பிறகு ம. பெ. பிச்சையா நாட்டார், அ. சுயம்பிரகாச உடையார், ப. நடராசத் தென்கொண்டார், து. முத்துவேற் சுண்டையார்

முதலியவர்களும் திருச்சி வந்திருந்து நாட்டாரிடம் தமிழ்ப்பாடம் கேட்டுவந்தனர்.

கல்லூரிகளில் பயின்ற மாணக்கர்களில் எண்ணில்லாதவர்கள் மிக்க அன்புடையவர்கள் ஆயினும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் :—

பொன்னம்மாள், பி.ஏ., அவர்கள், சிவகங்கை சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், பசுபதிபாளையம் க. வேலாயுதக் கவுண்டர் அவர்கள், ஏ. இராமசாமிக் கவுண்டர், எம்.ஏ., அவர்கள், டி. எம். கோவிந்தராஜன், பி.ஏ., அவர்கள், பெங்களூர் பி. கோவிந்தசாமிக் கவுண்டர், பி.ஏ., அவர்கள், கோலாலம்பூரில் 'தமிழ் நேசன்' பத்திரிகை ஆசிரியராய் இருந்த கே. நரசிம்ம ஐயங்கார் அவர்கள், டி. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.ஏ., அவர்கள், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம்.ஏ., அவர்கள், எஸ். ஆறுமுக முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்., எல்.டி., அவர்கள், உருத்திரபதி, எம்.ஏ., அவர்கள், டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார், எம்.ஏ., பி.எச்.டி. முதலானவர்கள்.

## உரிமை நண்பர்கள்

நாட்டாரால் தன்னலம் கருதாத உரிமை நண்பர்களாகக்கொண்டு பாராட்டப்பட்டு வந்தோர் செந்தமிழ் புரவலர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள், கோயம்புத்தூர் திருவாளர் ஆர். வி. இலட்சுமைய நாயுடு அவர்கள், திருவாளர் அ. மு. சரவண முதலியார் அவர்கள் ஆவர். இம்மூவரும் நாட்டாரின் உள்ளத்தினை விட்டு நீங்காத ஒத்த உணர்ச்சியுடைய உண்மை நட்பாளர் ஆவர்.

நாட்டாருடைய அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய வர்களாய் இருந்த பெரியோர்கள், திருவையாற்றுப் பரமசிவம் என்னும் காரைப்பாக்கம் சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு. சிவசண்முக மெஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள், கல்லல் உயர்திரு. குக. மணிவாசக சரணலைய சுவாமிகள் என்னும் இவர்கள் ஆவர். திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்க ளாகிய உயர்திரு. காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமி அவர்களும், நாட்டார் அவர்கள்பால் மிக்க அன்பும் மதிப்பும் உடையவராவார்கள்.

## நாட்டாரின் நாட் குறிப்புகளிற் சில (Diary)

15—5—1941. செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இறைவனடி சேர்ந்தமை அறிந்தவுடன் எழுதியது :—

“ நெஞ்சம் கலங்கிவிட்டது. தமிழ் நாட்டில் அவர் போலும் ஒருவரை இனிக் காணவியலுமா ? தமிழ்ப் பற்றே உருவம் ; தமிழ் வள்ளல் ; தன்னலமற்ற துறவி; அஞ்சா நெஞ்சினர். தம் உடல் பொருள் ஆவியெல் லாம் தமிழ்ச் சங்கத்திற்கே ஆக்கினர். சங்க மாணக் கர்களும் திக்கற்ற குழந்தைகளுமே அவருக்கு மக்கள்.

என்மாட்டு வைத்திருந்த அன்பையும் மதிப்பை யும் என்னென்பேன் ! எனக்கு அவர்செய்த உதவி தான் எத்தகையது ? உயர் புகழாளர், உண்மைநெறி ஒழுகினர், உண்மையை அடைந்தார். அவருக்குப் பின் என் வாழ்க்கையில் என்ன சுவையிருக்கப்போகி றது ? அவரைக் குறித்து இப்படியெல்லாம் எழுதி முடியுமா ? இவ்வளவில் நிறுத்துகிறேன்.”

26—12—1941. சைவ சித்தாந்த மகா சமாஜ விழாவின் பொருட்டு திருச்சி சென்றபொழுது அன்

பர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வீட்டில் பகல் உணவு உண்டபின் நடந்த நிகழ்ச்சி :—

"உணவின் பின் திரு. விசுவநாதம், தம் பத்தினியுடனும், குழந்தைகளுடனும், அடியில் வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டமை மிக்க உருக்கமாக இருந்தது. என்மாட்டு அவர் வைத்திருக்கும் அன்பும் மதிப்பும் அளவிடற்பாலவல்ல. ஆனால் என் அடியில் வணங்கித் திருநீறு பெற்றுக்கொள்ள யான் என்ன தகுதியுடையன் என்ற அச்சம் தோன்றினும் சிவபிரான் திருவருளை நினைந்து திருநீறு வழங்கினேன். வணக்கமெல்லாம் இறைவனைச் சார்தல் வேண்டும்.!

2—2—1942. உயர்திரு. ஞானியாரடிகள், பழனிக்குச் சென்றிருந்தபொழுது இறைவன் திருவடியை அடைந்தார்கள் என்ற செய்தியை அறிந்தபொழுது எழுதியது :—

"ஆ! என்ன துன்பம்! என்ன இழப்பு! அவர் போன்ற கல்வியும் சொல்லாற்றலும் உடையாரை எங்கே, எப்பொழுது காணமுடியும்? என்போன்றவர்களின் பேச்சுத் திறனெல்லாம் அவர்கள் சொல்லாற்றலின் முன் சூரியனுக்கு முன் மின்மினிபோலாகுமே, எத்தனை நூறுயிரவர்கள் அவர்கள் சொற்பொழிவால் பயனெய்தி இருப்பார்கள்! அப்பெரியார் சிறியேன்பால்வைத்த அன்பு நாளுக்குநாள் பெருகி வந்ததே. முருகக் கடவுள்பால் எல்லையில்லா அன்புடைய பெரியார் தைப்பூசத் திருநாளில் பழனி ஆண்டவன் திருமுன் ஆண்டவனடியடைந்தார்."

30—4—42. "மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதைய்யரவர்கள் 28-4-42 செவ்வாய்மாலை $3\frac{1}{4}$ மணிக்குத் திருக்கழுக்குன்றத்திலுள்ள திருவாவடு

துறை மடத்தில் சிவபதமடைந்தனர் என்ற செய்தி இன்றிரவு பத்திரிகையால் அறிந்தேன். தமிழுக்கு உபகாரிகளாயுள்ள பெருமக்கள் ஒவ்வொருவராக அடுத்தடுத்துச் சென்றுகொண்டிருக்கின்றனர். ஐயரவர்கள் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் கல்வி பயின்று, கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியிலும், சென்னை இராசதானிக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்து தமிழ்ப் புலமை நடத்தியவர். சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை என்ற காப்பியங்களையும், குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்ற சங்கத் தொகை நூல்களையும் அரிதின் ஆராய்ந்து அச்சிட்டு உதவியவர். மற்றும் பல தல புராணங்களும், பிரபந்தங்களும் அவரால் அச்சிடப் பெற்றுள்ளன. சிறிதும் ஆங்கிலக் கல்வி இல்லாதவராயினும் இவர் நூல்களை அச்சிட்டமுறை ஆங்கிலம் கற்றவர்க்கெல்லாம் வியப்பு விளைக்கும். குறுந்தொகைக்கு விரிவாக உரை எழுதியுள்ளார். கல்வியநுபவத்தோடு நெடுங்கால உலக அநுபவமும் உடையவர். தமிழ்நாட்டிலுள்ள அரசர்கள், பிரபுக்கள், மடாதிபதிகள் முதலிய எல்லாருடைய பழக்கமும், உதவியும் இவருக்கு இருந்தன. தமிழ்ப் புலவர்களில் மகாமகோபாத்தியாயர், டாக்டர் என்ற இரு பட்டமும் பெற்றவர் இவரே. இவருக்கு வயது 86 இருக்கும். இவ்வளவு தளர்ந்த வயதிலும் இடையருது நூல்கள் அச்சிடும் முயற்சி யுடையராகவே இருந்து வந்தனர். இவர் வாயிலாகத் தமிழ் மொழி மிகுந்த செம்மையும் வளமும் அடைந்துளதென்பதில் ஐயமில்லை.

செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசனர் உயிர் நீத்த சித்திரை வளர்பிறைத் திரயோதசியிலேயே இவரும் உயிர் நீத்துளர். இவரது தகுதிக்கு ஆயிரத்திலொரு கூறும் இணையாகாத அரசியல் ஆரவாரக்காரர்கள் உயிர் துறந்திருந்தால் தமிழ்நாடெங்கணும், கடையடைப்புகளும், கூட்டங்களும், ஊர்வலங்களும் முதலிய ஆர்ப்பாட்டம் மிகுந்திருக்கும். தமிழ்நாடு செய்த பாவம் தமிழறிஞரைப் பாராட்டுவாரிலர்.''

## 5. மணிவிழா ஏற்பாடும், இறைவனடி சேர்ந்தமையும்

நாட்டார், கரந்தைப் புலவர்கல் லூரியின் தலைவராக இருந்தபொழுது தஞ்சையில் இராஜகோபால சாமி கோயில் தெருவில் 2659 எண்ணுள்ள வீட்டில் குடியிருந்து வந்தார். அவ்வீட்டு மாடியில் உள்ள ஓர் கூடத்தில் அமர்ந்துதான் அவர் நூலாராய்ச்சி செய்வது வழக்கும்.

தஞ்சையில் இருந்தபொழுது கூடவே இருந்து குற்றேவல் புரிந்த மாணவர்களில் மிகவும் முக்கியமானவர், தனது இன்னிசையால் நாட்டாரை மகிழ்வித்த அரங்கநாதன் என்பவர். 1941-ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து நாட்டார் நாடோறும் இரவிற் படுக்கத் தொடங்குமுன் அரங்கநாதன் திருவாசகத்தை முறையாக இன்னிசையோடு படிப்பதைக் கேட்டுக் கொண்டே உறங்கிவிடுவார். அவர் உறங்கிய பின்பு அரங்கநாதன் தானும் உறங்கப் போய்விடுவார். இவ்வாறு திருவாசகம் படிப்பது 30—1—1942-ல் முற்றுப் பெற 1—2—1942 முதல் இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை முறையாக இன்னிசையோடு ஒவ்வொரு இரவும் படிக்கக் கேட்டு வந்தார்.

இவ்வாறிருக்கும் நாளில், நாட்டார் அவர்களின் 60-வது ஆண்டு நிறைவு விழாவை 8—5—1944-ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக, பூண்டி திருவாளர் ஆ. வீரையா வாண்டையார் அவர்கள் தலைவராகவும், கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பொரு

ளாளராகவும், வித்துவான் அ. வடிவேற்சோழகர் அவர்கள், செயலாளராகவும், மற்றும் பல மாவட்டங்களிலும் உள்ள 24 பெரியோர்கள் உறுப்பினராகவும் உள்ள செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. விழாக் குழு செய்யக் கருதியிருந்த திட்டங்கள் பின் வருமாறு :—

1. நாவலர் நாட்டார் அவர்களுக்கு விழா நாளில் வாழ்த்து மடல் வழங்கல்.
2. நினைவு மலர் வெளியிடுதல்.
3. உருவப் படத்தினைக் கரந்தைச் தமிழ்ச் சங்கத்தே திறந்து வைத்தல்.
4. கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்களுக்குப் பரிசு வழங்க நிதி ஏற்படுத்தல்.
5. பொற்கிழி அளித்தல்.
6. சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தல்.
7. ஏழைகளுக்கு உணவளித்தல் முதலியன.

இதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் பொருள் வசூல் செய்தார்கள்.

ஆனால் இறைவன் திருவுளம் வேறு வகையாக இருந்தது.

1944-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணி அளவில் தஞ்சையில் தமது வீட்டு மாடியில் கைகால் கழுவி விட்டுக் களைப்பு மிக்கு வந்து தாழ்வாரத்தில் கிழக்கு நோக்கி இருந்த நாற்காலியில் நாட்டார் அமர்ந்தார். வீட்டின் திண்ணையில் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள், மறுநாள் நடக்கவிருக்கும் பரீக்ஷைக்கு ஹால் டிக்கெட்டுகள் வாங்க வந்திருந்தனர். ஒரு மாணவன்

மாத்திரம் முன்னர் மாடிக்குச் சென்று அவர் அருகில் இருந்தான். அவர் நாற்காலியில் உட்கார்ந்ததும் தலை பின் நோக்கிச் சாய்ந்தது. மாணவன் பின்புறம் தலையைத் தாங்கி பிடித்துக் கொண்டான். முன்புறம் பார்க்கவில்லை.

இங்கு இவ்வாறிருக்க, முந்திய இரவில் திருவையாற்றில் நாட்டாருடைய மூத்த மருகரான வித்துவான் T. சிவப்பிரகாசச் சேதிராயர் ஓர் தீக் கனவு கண்டு, காலையில் எழுந்ததும் சைகிளில் புறப்பட்டு, நேராகத் தஞ்சைக்கு வந்து விரைந்து மாடிக்குச் சென்றார். அவ்வமயம்தான் மாணவன் தலையைத் தாங்கிக் கொண்டிருந்தான். நாட்டார் இறக்குந் தருவாயில் இருப்பதை சேதிராயர்தான் முதன் முதல் கண்டது. பின்பு அலறிப்புடைத்து டாக்டர்களுக்குச் சொல்லி அனுப்பினார்கள். டாக்டர்கள் வருவதற்குள் ஆவி பிரிந்து விட்டது. பிறகு அவரைப் பெரிய வண்டி ஒன்றில் ஏற்றிச் சொந்த ஊராகிய நடுக்காவேரிக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அவ்வமயம் நீலகிரியில் அலுவலில் இருந்த எனக்கும் தந்தி கொடுத்தார்கள்.

மறுநாள் (29—3—44) அவருடைய பூதவுடல், தஞ்சை, திருச்சி ஜில்லா தமிழன்பர்கள் அனைவரும் திரண்டு வந்து தூக்கிவர, குடமுருட்டி யாற்றின் தென் கரையில் உள்ளதும், அவருடைய இளவல் மு. கோவிந்தராஜ நாட்டாருக்குச் சொந்தமானதுமான ஒரு இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. அடக்கம் செய்வதற்கு முன்பு அன்று வந்திருந்த தமிழ் அன்பர்கள் ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டிய கடைசி மரியாதையைச் செய்து சொற்பொழிவாற்றினார்கள்.

அவர்களில் அப்பொழுது தமிழ்ப்பொழில் ஆசிரியராக இருந்த கோ. சி. பெரியசாமி புலவர், கல்லறையில் ஆற்றிய சொற்பொழிவு குறிப்பிடத்தக்கது. அது பின் வருமாறு :—

## கல்லறைச் சொற்பொழிவு

நாவலரே! எம்மினின்றும் நீவிர் பிரிந்து சென்று விட்டீர்கள். தங்கள் பிரிவு என் உள்ளத்தைப் பிளக்கு கின்றது. அன்று ஒரு மன்னன் நாட்டினின்றும் பிரிந் தான். அவன் பிரிவுக்கு ஆற்றாது வருந்திய அந்நாட்டு அஃறிணைப் பொருள்களின் நெகிழ்ச்சியையும் எழுதப் போந்த புலவன் ஒருவன், "ஆவு மழுத, அதன் கன் றழுத, அன்றலர்ந்த பூவுமழுத, புனற்புள்ளழுத...... காவு மழுத' என எழுதிக் கதறினன். இன்று நின் பெரும் பிரிவைக் குறித்து யானென் சொல்லிக் கதறு வேன்! புலவர் பெருமானே! இன்று எம் கரந்தைத் தமிழ்ச் சங்கம், ஆண்டு விழாவில் தலைமை தாங்கி அணி செய்வித்த அரும்பெருந் தலைவனை இழந்தது. கரந்தைத் தமிழ்ப் பெரு மன்றம், இழுமென் மொழியால் விழு மிய நுவலும் புலவரை இழந்தது. எம் கரந்தைப் புலவர் கல்லூரி சிறந்த தலைவனை இழந்தது. எம் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் திரிபொடு பஃறலை தெரி விருள் பல்லவும், திட்ப நுட்பம் வாய்ந்த தெளிவுரை களால் போக்கியருளும் தீந்தமிழாசானை இழந்தார் கள். தேனருவியென ஒழுகிச் செல்லும் செந் தமிழ் உரைகளைச் செவிமடுத்து மகிழும் பேற்றினை இத் தென் தமிழ்நாட்டவையோர் இழந்தனர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தங்கள் விருப் பின் வண்ணம் செயலாற்றி மகிழ்விக்கும் வீறு

டைப் புலவனை இழந்தனர். திங்கள் வெளியீடுகளாகிய செந்தமிழ்ச் செல்வியும், தமிழ்ப் பொழிலும், சிறந்த எழுத்தாளனை இழந்தன. தமிழ்த்தாய், தன் முடிமணி யனையானை, கண்மணி யனையானை இழந்தனள். பெரும ! நின்னால் சிறந்த உரை பெறவிருந்த தமிழ் நூல்கள் அப்பேற்றை இழந்தன. பெரியோனே ! இவ் விருபதாம் நூற்றாண்டில் சிறந்த உரையாசிரியனாகத் திகழ்ந்தனையே ! பண்டை உரையாசிரியர்களால் உரை காணாது விடப்பெற்ற சிலப்பதிகாரப் பகுதிகட்கும் அகநானூற்றிற்கும், மணிமேகலைக்கும், சிறந்தவுரை யெழுதி அளித்த நின் கைகளை அந்தோ ! இதுபோது மடக்கிக் கட்டி இவண் இக்கல்லறையில் வைத்துள்ளனரே ! இக்காட்சியைக் கடைசியிற் காணவோ யானிவண் போந்தேன் ? பெருமானே நினது அறுபதா மாண்டின் நிறைவு விழாவில் நினக்கு அணிமலர் சூட்ட எண்ணிய பாவியேன் கையினால் இன்று நின் பிணவுடற்கு மாலை சூட்டினேனே. கள்ளர்கோமானே ! களிற்றியானை நிரைக்குக் கனிவுறும் உரை விரித்த நின்வாய் இன்று கட்டப்பெற்றுள்ள காட்சியையா யான் காணவேண்டும் ?

அன்பர்களே ! நம் நாவலரவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார்கள். " தனித் தமிழ் பயின்றோர் ஆராய்ச்சி நூல்கள் எழுதுதற்குத் தகுதியில்லாதவர் " எனக் கழறுவோர் கூற்றை வெட்டி வீழ்த்தி ஆங்கிலம்பயின்றோரும் எழுதற்காகா ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிட்ட எம் அறிஞர் தலைவர் மறைந்தார். இத் தமிழ்நாட்டில் சிறந்த உரையாசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், பேராசிரியராகவும் திகழ்ந்த நம் நாவலர் அவர்கட்கு நம் தமிழர்களின் ஆதரவு ஒருமுக

மாகக் கிடைத்திருப்பின், முன்னரேயே எத்துணையோ சிறப்புப் பட்டங்கள் இவர்கட்கு அரசாங்கத்தாரால் அளிக்கப்பெற்றிருக்கு மென்பதற்கு ஐயமுண்டோ? தமிழ்நாட்டில் சிறந்த ஆராய்ச்சி நூல்களைச் சீர்தூக்கிப் பரிசளிக்க எண்ணி அரசாங்கத்தார் நூற்றேர்வில் சிறந்த நூல் இவையெனத் தேறின், இவர்கள் எழுதியுள்ள கபிலர், நக்கீரர், கள்ளர் சரித்திரம் முதலிய ஆராய்ச்சி நூல்கட்கன்றிப் பிற நூல்களுக்கு முதற் பரிசு கிடைக்குமோ? தமிழ் நாட்டில் இவ்விருபதாம் நூற்றுண்டில் சிறந்த உரையாசிரியரைத் தேர்ந்து அவருக்குப் பரிசளிக்க எண்ணின் நம் நாட்டாரவர்கள் அன்றிப் பிறர் யார் அப்பரிசினைப் பெறவல்லார்? சங்க நூல்களில் மிகக் கடினமான பாடங்களுக்கும் எளிதின் உரை விரித்துணர்த்தும் ஆற்றல் இவர்கட்கு என அமைந்து கிடந்தது. தாமேபயின்ற தமிழ்ப் பேராசிரியர் ஆயினும், எப்பேராசிரியருக்கும் இல்லாத சிறந்த பண்புகள் பல இவர்கள்பால் காணப்பட்டன. செருநரும் விழையும் செயிர்தீர் காட்சி செம்மல் எம் நாட்டாரவர்களே யாவர்கள். பிள்ளைத் தமிழ் முதல் பெருநூல்களனைத்தும் தம் உளத்துள் கொண்டிலங்கிய பெருமகன் எம் நாட்டாரவர்களையே இன்று இக் கல்லறை மூடிக்கொண்டது. இப்பெருமகனை இக் கல்லறையுளிருத்தி இவர் முன்னின்று பேசுகின்றேன்.

சிறிது நேரத்திற்குமுன் நீவிர் இவர்கள் தலையில் செம்மண்ணைப் பெய்தீர்கள்; நன்று என்னும் குன்றிலேறித் தன் கண்களில் கண்ட அளவு தன்னுட்டையெல்லாம் புலவர் பெருமானுகிய கபிலருக்குக் காட்டி உரிமையாக்கித்தந்த சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன் இன்றிருந்தானுயின் இவர்கள் தலையில் சேழும் பொன்னைப் பெய்து இச்செம்மலைப் போற்றுதிருப்பனே? சற்று நேரத்திற்குமுன் இவர்கள் தலையில்

மண்ணைப் பெய்தீர்கள் ; பண்டு பதினறு நூருயிரம் பொன்கொடுத்துப் பட்டினப்பாலையை ஏற்று மகிழ்ந்த மன்னன் கரிகாற் பெருவளத்தான் இச்சோழ நாட்டி லிருந்து இன்று ஆட்சி புரிவானுயின் இவர்கள்மீது மணிகளைப்பெய்து, மார்புறத்தழீஇக் கண்ணீர் வடிக்கா திருப்பானே? சிறிது நேரத்திற்குமுன் இவர்கள்மீது திருநீற்றை மூட்டையாகக் கொணர்ந்து பெய்தீர்கள் ; " ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடிமருதன் தலைவனுக உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைகவென் னிலவரை " எனப் புல வரைச் சிறப்பித்து வஞ்சினங்கூறிய பெருமன்னனை பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இன்றிருந்தானுயின் கொற்கைத் துறை முத்தைக் கொணர்ந்து பெய்து, தன் கண்ணீர் முத்தையும் சிந்தாதொழிவனே? நம் மன்னர்களை இழந்தோம்! புலவர்களைப் போற்றும் வள்ளல்களை இழந்தோம்! புலம்புகின்றோம்!

மேனுட்டில் சிறந்த புலவர்களிருந்து வாழ்ந்துவந்த இல்லங்களை அவ்வரசினர் பொருள்கொடுத்து வாங்கிப் பெரிய எழுத்துக்களால் இவ்விப் புலவர் இவ்விவ் வில் லங்களில் இவ்விவ் வாண்டில் வாழ்ந்துவந்தனர் என எல்லோருமறியப் பெரும் எழுத்துக்களிற் பொறித்துப் போற்றி ஓம்படை புரிகின்றனர். தமிழ் நாட்டில் தமிழரசின்றிப் பிறர் ஆட்சி நிகழ்கின்றமையினலே நந் தமிழ்மொழிப் புலவர்களின் பெருமையுணர்ந்து அவர்கள் போற்ருர் என்பதை யாம் நன்கறிவோம். அரசினர் போற்ருவிடினும் மொழிவளன் படைத்த புலவர்மாட்டுப் பெரும் பற்றுடைய செல்வர்களும், புலவர்களும், இக்கல்லறையினைப் போற்றிக் காத்தல் கடனெனை அறிவிக்க விரும்புகின்றேன். வேற்று நாட்டு மன்னனெருவன் ஆங்கில நாட்டு மன்னனைக்

காண அந்நாட்டிற்கு வந்தபோது முதன்முதல் உலகப் பெருங் கவியாகிய செகப்பிரியர் கல்லறை யெங்கே யுளதென வினவி அப்புலவர் பெருமான் கல்லறையின் முன் சென்று அக்கல்லறைக்கு வணக்கம் செலுத்திய பின்னரே அந்நாட்டு மன்னனைக் காணச் சென்றானென்று பெரியோர் கூறக்கேட்கின்றோம். நம் நாட்டாரையா அடங்கியுள்ள இக்கல்லறையும் பிற்காலத்தில் தமிழக மன்னர்களால், புலவர்களால், பொது மக்களால், போற்றி வணங்குதற்குரிய கோயிலாக விளங்கலாம். இக்கல்லறையைப் போற்றிக் காத்தல் நம்மவர் கடனன்றோ ? புலவரேறே! நின்போன்று சிறந்த புலவர்களை எத்துணையோ நூற்றாண்டு கழியினும் இனி காணுதற்கியலுமோ ? இனி யாருளரோ ! முன்னுமில்லை என்ற மொழிக்கிணங்க இலங்கினையே ! எந்தையே ! என்பாலன்பு கொண்டு என்னையுமோர் மகனாக்கி, கல்லூரி ஆசிரியனாக்கி, பொழிலாசிரியனாக்கிப் போற்றிய நின் திருவடிகட்குக் கடைசி முறையாக என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன். புகழுடலிற்பொலிவுறும்பெரியோராகிய நீவிர் என் வணக்கத்தை ஏற்றருள்வீராக !"

கல்லறைப் பேச்சு முடிந்தபின் தேவார திருவாசகங்கள் முறைப்படி ஓதப்பெற்றன.

பின்னர் அவ்விடத்தில் ரூ. 2000 பொருட்செலவில் ஒரு கற்கோயில் கட்டப்பட்டது. கோயில் கட்டி முடிந்த பின்னர் 40-வது நாள் மண்டல பூசனை சிறப்பாக நடைபெற்றது. தமிழ் நாட்டில், தற்காலத்தில், தமிழ்ப் புலவர் ஒருவருக்காக முதன் முதல் எழுப்பப்பட்ட கற்கோயில் இது ஒன்றுதான். கோயில் இருக்கும் இடத்தை திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள் கோயில் பெயருக்கு இனம் சாசனம் செய்து கொடுத்தனர். கோயில் "ந. மு. வே. நாட்டார் கோயில்" என்ற பெயருடன் வழங்கிவருகிறது. நாட்டாரின்



நாட்டார்க் கோயில்

மகனார்* கோயிற் பொறுப்பாளராக இருந்து பணியாற்றி வருகின்றார்.

இது இவ்வாறிருக்க, நாட்டார் அவர்களின் 60-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட எண்ணியிருந்த செயற் குழுவினர் அதனை, நினைவு விழாவாக மாற்றி, திருவாளர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நடத்தினார்கள். அவ்வமயம் கோவையிலிருந்து இதற்கென வந்திருந்த நாட்டார் அவர்களின் தனிப் பெரும் நண்பர் திருவாளர் ஆர். வி. இலக்குமைய நாயுடு அவர்கள் பேசுதற்கு எழுந்து மேடைமீது ஏறிப் பேச நா எழாமல் கண்ணீர் சிந்தி இறங்கிவிட்டார்கள். நிறைவு விழாவுக்காக அதுவரையில் வசூல் செய்யப்பட்ட ரூ. 1000 நாட்டார் பெயரால் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்க்குப் பரிசு வழங்கும் வண்ணம் மூலதனமாகக் கொடுக்கப்பட்டது.



## தமிழ்ப் பேரவை

நாட்டார் திருக்கோயில் மண்டல பூசனையின் போது ஆரம்பிக்கப்பட்ட "ந. மு. வே. நாட்டார் தமிழ்ப் பேரவை" தஞ்சையிலிருந்து அரிய தமிழ்ப் பணி செய்து வருகின்றது. ஆண்டுதோறும் பல தமிழ் அறிஞர்களைக்கொண்டு சிறந்த பொருள்கள்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. ஆண்டு தோறும் தஞ்சை நகர் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சொற்பொழிவுப் போட்டியும் தமிழ் நாட்டிலுள்ள தமிழ்க் கல்லூரிகளின் புலவர் மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டியும் நடத்தப்பெற்று, பரிசுகள் வழங்கப்பெற்று வருகின்றன.

---

*இப்புத்தகாசிரியர்.

தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்

(ந. மு. வேங்கடசாமி நாட்டார்)

ஆசிரியர்: வே. நடராஜன்

★

வே. நடராஜன்
நாட்டார் பதிப்பகம்
4, புதுப்பேட்டை தோட்டத்தெரு,
ராயப்பேட்டை, :: சென்னை—14

Re. 1—0—0

Wrapper Printed at the Asian Printers, Madras-5.